சனவரி
2021



# வழிகாட்டல் 2021

2021 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# வழிகாட்டல்: 2021

# 2021 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்


**சமர்ப்பிப்பவர்**

**தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்**

**ஆளுநர்**

**இலங்கை மத்திய வங்கி**


**2021 சனவரி 4**

## 1 அறிமுகம்

இலங்கை மத்திய வங்கியின் 2021ஆம் ஆண்டிற்கான வழிகாட்டலுக்காக உங்கள் அனைவரையும் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

2007ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாரம்பரியத்தினை நானும் தொடர்கிறேன். இவ்வழிகாட்டல் 2021ஆம் ஆண்டிற்கும் அதற்கு அப்பாலுக்குமான ஒரு சில ஆண்டுகளையும் உள்ளடக்குகிறது. குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய நாணய மற்றும் நிதித் துறை கொள்கைகள் பற்றிய பரந்த நெறியாள்கைகள் பற்றி நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். துரதிஷ்ட வசமாக, சூழ்நிலைகளின் காரணமாக காணொளி வடிவத்தில் இதனைச் சமர்ப்பிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறேன். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று சமூகங்கள், பொருளாதாரங்கள் மற்றும் நிறுவனங்களின் தொழிற்பாட்டு முறைகளை முற்றுமுழுதாகக் கற்பனை செய்து பார்க்க முடியாதளவிற்கு மாற்றியமைத்திருக்கிறது.

2020ஆம் ஆண்டு எம்மில் அநேகமானோர் மிக விரைவில் மறந்துவிட வேண்டி விரும்புகின்றதொரு காலமாகும். ஏனெனில் இது பிரதானமாக கொரோனா வைரஸ் தொற்று உலகம் முழுவதிலுமுள்ள மனித இனத்தின் மீது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தியிருந்ததாலாகும். தற்பொழுது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, உலகப்போர்-II இன் பின்னரான மிகக் கடுமையான உலகளாவிய நெருக்கடியொன்றாகும். 2020இன் இறுதி பத்து மாத காலப்பகுதி முழுவதும் நாம் கேட்ட செய்திகளெல்லாம் துன்பம், மரணம், பயம் பற்றியவேயாகும். எமது வாழ்க்கை பெரும் அதிர்வுகளுக்குள்ளாகியிருக்கிறது. நாம் இதிலிருந்து மீண்டு எப்பொழுது வழமையான வாழ்விற்கு திரும்ப இயலுமென தெரியவில்லை. எனினும், புத்தாண்டு எமக்காகக் காத்திருக்கிறது. அத்துடன், மிக விரைவில் சிறந்ததொரு காலம் ஆரம்பமாவதற்கான உண்மையான சில சான்றுகள் காணப்படுகின்றன. 2020இன் துன்பம் நிறைந்த நினைவுகளையெல்லாம் புறம்தள்ளிவிட்டு, விதியைப் பற்றி எவர் எதனைச் சொன்னாலும் எதிர்காலத்தில் நல்லதே நடக்குமென நாம் சாதகமாக உணர்ந்து கொண்டு எம்மைச் சுற்றி நல்ல செய்திகளைப் பரவ விடுவோம்.

உலகளாவிய ரீதியில் காணப்படும் மற்றைய பல பொருளாதாரங்களைப் போன்றே, இலங்கையின் பொருளாதாரமும் குறிப்பாக முதல் அலைக் காலப்பகுதியில், உலகளாவிய நோய்த்தொற்றின் திடீர் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டிற்குள் விதிக்கப்பட்ட பயணத்தடைகளின் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டது. அரசாங்கமும் மத்திய வங்கியும் வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பெருமளவில் உதவுவதற்காக உடனடியாக முழுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டன. மத்திய வங்கி நாணய நிலைமைகளைத் தளர்த்துவதற்காக முன்னொருபோதுமில்லாத வழிமுறைகளை அறிமுகப்படுத்தியதுடன் கடன் வழங்கத்தக்க நிதியங்களின் செலவினையும் குறைத்தது. அதேவேளை, அரசாங்கம் பாரிய வரிக் குறைப்புக்கள், இலக்கிடப்பட்ட உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் அத்துடன் ஏனைய வழிமுறைகள் என்பனவற்றினூடாக கணிசமானளவு இறைத் தூண்டல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. எனினும், சமூக இடைவெளி வழிமுறைகள் காரணமாக தளர்வடைந்த பொருளாதார நடவடிக்கைகள் அரச அரசிறையில் குறிப்பிடத்தக்க குறைப்பிற்குக் காரணமாகியது. இது உலகளாவிய

நோய்த்தொற்றுடன் தொடர்பான அரச செலவினங்களில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்புக்களின் பின்னணியில் இடம்பெற்றது. இதன் விளைவாக, அரசின் அரசிறை – செலவின இடைவெளியில் ஏற்பட்ட அதிகரிப்பு மத்திய வங்கியினால் இயற்கையான முறையில் நிதியிடப்பட்டது. அரசாங்கம் 2021ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் பாரிய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உட்பட பொருளாதாரத்தினால் எதிர்நோக்கப்பட்ட சவால்களைக் கட்டுப்படுத்துவதற்கு குறித்துரைக்கப்பட்ட உபாயங்களுடன் நவீன அணுகுமுறைகளைப் பற்றி தற்பொழுது அறிவித்திருக்கிறது. அரசாங்கம் அதன் செலவின நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்ததுடன் அதன் படுகடன் கடப்பாடுகளை நேரம் தவறாது மேற்கொண்டதுடன் இனிவரும் காலத்திலும் தொடர்ந்தும் அவ்வாறே மேற்கொள்ளப்படுமென்ற நம்பிக்கைக்கும் உத்தரவாதமளித்திருந்த போதிலும் பன்னாட்டுத் தரமிடல் முகவர்கள் நாட்டின், நாட்டிற்கான தரமிடலை தரக் குறைப்புச் செய்திருக்கிறது. மத்திய வங்கி சென்மதி நிலுவையில் தோன்றக்கூடிய ஏதேனும் அண்மைக் கால அழுத்தங்களை முன்கூட்டியே செயற்பாடு சார்ந்த முறையில் கட்டுப்படுத்துவதற்கு கூடியளவு முன்னுரிமையை வழங்கியுள்ளது. எதிர்வரும் காலத்தில் நாட்டின் வெளிநாட்டுக் கடப்பாடுகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் முகாமைப்படுத்தப்பட்டு வருகிறது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பொருளாதாரத்தின் சில நீண்ட கால அமைப்பியல் பலயீனங்களைச் சீர்செய்து கொள்வதற்கான சந்தர்ப்பமொன்றினை எமக்கு வழங்கியிருக்கிறது. பின்வருவன இந்த அமைப்பியல் பலயீனங்களில் சிலவாகும்: ஒப்பீட்டு ரீதியில் கவனிக்கப்படாதிருக்கும் உள்நாட்டு உற்பத்தி, மிகையான உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதிகளின் சந்தை குவிவுகள், பெருமளவிற்கு இறக்குமதியில் தங்கியிருக்கும் நுகர்வு மற்றும் உற்பத்தி, ஆங்காங்கே நிலவுகின்ற வறுமை நிலைமைகள் மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய சமூகக் குழுமங்கள், இரட்டைப் பற்றாக்குறை (வரவு செலவுத்திட்டத்திலும் அதேபோன்று வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிலும்) மற்றும் வெளிநாட்டுப் படுகடனில் அதிகளவிற்கு தங்கியிருக்கின்றமை என்பனவாகும். வரவு செலவுத்திட்டம் 2021 உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளினூடாக வெளிநாட்டு வர்த்தகத்தினை திறந்துவிடுவதன் மீதான மிக அறிவுபூர்வமான நோக்குடன் உற்பத்தியினால் தூண்டப்பட்ட பொருளாதாரத்தினை ஊக்குவித்தல் வழிமுறைகளுடன் ஆதரவளிக்கப்பட்ட உண்மைப் பொருளாதாரத்தின் மீளெழுச்சியை எதிர்பார்க்கிறது. வேளாண்மை உற்பத்திகளினாலும் அதனுடன் தொடர்புபட்ட உயர் பெறுமதி சங்கிலி நடவடிக்கைகளினாலும் பெறப்பட்ட உத்வேகம் கணிசமானதாக இருக்கிறது. இவ்வழிமுறைகளை பொதுவாக நோக்குகையில் இது நடுத்தர காலத்தில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை நீடித்துநிலைத்திருக்கச் செய்வதற்கான தாங்கிருப்புக்களை நாடு கட்டியெழுப்புவதற்கு உதவும்.

**இத்தகையதொரு பின்னணியில், 2020ஆம் ஆண்டுப்பகுதியின் பொருளாதார செயலாற்றத்தின் சுருக்கமான மதிப்பீடொன்றுடன் 2021ஆம் ஆண்டுக்கான வழிகாட்டலை சமர்ப்பிக்கத் தொடங்குகிறேன்.**

2020இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் மொ.உ.உற்பத்தியின் தொகுப்பிலிருந்தே இலங்கை பாரிய பொருளாதாரச் சுருக்கமொன்றினைக் கொண்டிருந்தமைக்கு ஏப்பிறல் - மே காலப்பகுதியில் காணப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக அமைந்தன.

இக்கட்டுப்பாடுகளின் விளைவாக, குடித்தொகையில் பெரும்பகுதியினர், குறிப்பாக முறைசாராத் துறைகளிலும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிலுமுள்ளவர்கள் கடுமையான இடர்ப்பாடுகளை எதிர்நோக்கினர். குறிப்பிட்ட மற்றைய துறைகள் வேலைச் சூழலுக்கு மாற்றங்களை நடைமுறைப்படுத்தின. இங்கு அவர்களது தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு டிஜிட்டல் மாதிரிகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன. இம்மாற்றங்களும் பொருளாதார நடவடிக்கைகளில் அளவிடுவதில் கணிசமான இடர்ப்பாடுகளைத் தோற்றுவித்து, மாற்றமடைந்து வருகின்ற பொருளாதார சூழல்களை உள்ளடக்கிக் கொள்ளும் விதத்தில் அத்தகைய முறையியல்களை இற்றைப்படுத்திக் கொள்வதற்கான அவசியத்தை எடுத்துக்காட்டியது. பொருளாதார வளர்ச்சி சாத்தியமானளவிற்கும் குறைவாகக் காணப்பட்டமைக்கிடையில், உணவுப் பணவீக்கத்தில் ஓரளவு விரைவுத்தன்மை காணப்பட்ட போதும் முதன்மைப் பணவீக்கம் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் ஆண்டு முழுவதும் இலக்கிடப்பட்ட மட்டமான 4-6 சதவீத வீச்சிற்குள் பெருமளவிற்குத் தொடர்ந்தும் காணப்பட்டது. அதேவேளை, மையப் பணவீக்கம் தொடர்ந்தும் குறைந்தளவில் காணப்பட்டு, கேள்வியினால் தூண்டப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையினை எடுத்துக்காட்டின. மூன்றாம் காலாண்டளவில் பொருளாதாரம் கொவிட்-19இன் இரண்டாவது அலையினால் நான்காம் காலாண்டில் மீண்டுமொரு முறை தடங்கலுறுவதற்கு முன்னதாக குறிப்பிடத்தக்களவு உயர்ந்த மேல் நோக்கிய திருப்பத்தினை குறிப்பாக, காலாண்டிற்கு – காலாண்டு அடிப்படையில் பதிவுசெய்தது.

இலக்கிடப்பட்ட வீச்சிற்குள் காணப்பட்ட குறைந்தமட்டத்திலான பணவீக்கமும் நன்கு முறைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்களும் நலிவுற்ற பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்காக முன்னொருபோதுமில்லாத மட்டத்திற்கு நாணயக் கொள்கையைத் தளர்த்துவதற்கு மத்திய வங்கியை அனுமதித்தது. இதற்கமைய, கொள்கை வட்டி வீதங்களும் நியதி ஒதுக்கு விகிதமும் வரலாற்றிலேயே அவற்றின் மிகக் குறைந்த மட்டத்திற்கு குறைக்கப்பட்டதுடன் சிறப்புக் கடன்வழங்கல் திட்டங்கள் சலுகை வீதங்களில் முன்னெடுக்கப்பட்ட வேளையில், நாணயக் கொள்கை ஊடுகடத்தல் செயன்முறையினை விரைவுபடுத்துவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட கடன்வழங்கல் சாதனங்கள் மீது வட்டி வீத உச்சஎல்லைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், அரசாங்கத்தின் அவசரகால நிதியிடல் தேவைகளுக்கு வசதியளிக்கின்ற விதத்தில் மத்திய வங்கி முதலாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்தது. அதேவேளை, தனியார் துறைக்கான கொடுகடனில் மேலும் விரிவாக்கத்தினைத் தூண்டும் நோக்குடன் மத்திய வங்கி உள்நாட்டுப் பணச்சந்தையில் மிகையான திரவத்தன்மையிலும் அதிகரிக்கப்பட்ட மட்டமொன்றினைத் தொடர்ந்தும் அனுமதித்தது. இக்கணிசமானளவு நாணயத் தளர்த்தல் வழிமுறைகளின் விளைவாக, சந்தை வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்ததுடன் பெரும்பாலான அடித்தள அளவு வட்டி வீதங்கள் வரலாற்றிலேயே மிகக் குறைந்த மட்டங்களை அடைந்தன. இரட்டை இலக்க மட்டங்களில் காணப்பட்ட பெரும்பாலான கடன்வழங்கல் வீதங்கள் கணிசமாக வீழ்ச்சியடைந்து சராசரி புதிய வட்டி வீதங்களினை ஒற்றை இலக்க மட்டங்களுக்கு வீழ்ச்சியடையச் செய்ததன் மூலம் கடந்தவொரு தசாப்தத்திற்கும் மேலாகப் பேணப்பட்ட ஒற்றை இலக்கப் பணவீக்கத்தின் முழு நன்மைகளையும் பொருளாதாரம் பெற்றுக்கொள்வதனை இயலுமைப்படுத்தியது. தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் அண்மைய மாதங்களில் படிப்படியான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட

வேளையில் அரச துறைக்கான கொடுகடனில் அசாதாரணமான அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டமையானது 2020ஆம் ஆண்டுப்பகுதியில் பணநிரம்பலில் கணிசமான அதிகரிப்பொன்று ஏற்பட வழிவகுத்து, உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட பொருளாதாரச் சுருக்கத்திற்கு மத்தியிலும் அதன் இணை-சுழற்சி வட்ட வகிபாகமொன்றினை ஆற்றியது.

தற்பொழுது நிலவுகின்ற தாழ்ந்த வட்டி வீத அமைப்பு குறிப்பாக, குறைந்த வட்டி வீதங்களை எதிர்நோக்கும் சேமிப்பாளர்களுக்காக, மாற்று ஏற்பாடாக நவீனத்துவமானதும் பாதுகாப்பானதும் கவர்ச்சிகரமானதுமான நிதியியல் சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்கு நாட்டின் மூலதனச் சந்தைகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கான அவசியத்தினை எடுத்துக்காட்டுகிறது. மிக முக்கியமாக, பொதுவாக நிதியியல் தொழில் துறையானது வளர்ச்சி ஊக்குவிப்பு நடவடிக்கைகளை நோக்கி பல்வேறுபட்ட நிதியியல் சாதனங்களை நெறிப்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதில் முக்கியமான வகிபாகமொன்றினை ஆற்றுவது அவசியமாகும்.

உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பக் கட்டத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வெளிநாட்டுத் துறை 2020இன் நடுப்பகுதியிலிருந்து குறிப்பிடத்தக்க மீளெழுச்சியொன்றினைக் காட்டியது. இன்றியமையாதனவல்லாத வணிகப்பொருள் இறக்குமதிகளையும் வெளிமுக முதலீடுகளையும் கட்டுப்படுத்துவதற்காக முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமையும் தாழ்ந்த உலகளாவிய பெற்றோலிய விலைகளும் அதேபோன்று புலம்பெயர் வேலையாட்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க பாரியளவில் கிடைத்த பணவனுப்பல்களும் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினையும் வெளிநாட்டுத் துறையில் காணப்பட்ட சவால்களையும் பெருமளவில் கட்டுப்படுத்துவதற்கு உதவின. 2020இல் வணிகப்பொருள் இறக்குமதிகளில் காணப்பட்ட பெருமளவு குறைப்பு வர்த்தகப் பற்றாக்குறையினைக் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைத்தமையின் மூலம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதி வலுப்பெறுவதற்குப் பங்களித்தது. உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம் காரணமாக சுற்றுலா மற்றும் ஏனைய பணிகளிலிருந்து குறைந்த வருமானங்கள் பதிவுசெய்யப்பட்டன. புலம்பெயர் வேலையாட்களினால் பல்வேறுபட்ட சவால்கள் எதிர்நோக்கப்பட்ட போதும், தாக்கத்தினைப் பகுதியளவில் குறைக்கின்ற விதத்தில், வேலையாட்களின் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்க மீளெழுச்சியொன்று அவதானிக்கப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்று எல்லைகள் கடந்த நிதியியல் பாய்ச்சல்களை குறிப்பிடத்தக்களவிற்குப் பாதித்திருக்கிறது. அனைத்துத் தோற்றம்பெற்று வரும் பொருளாதாரங்களைப் போன்று, வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் குறைவாக இருந்த வேளையில், ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் மற்றும் பங்குரிமை மூலதனச் சந்தைகளிலிருந்து வெளிப்பாய்ச்சல்கள் பதிவுசெய்யப்பட்ட போதும் உள்நாட்டு முதலீட்டாளர்களின் தீவிரமான பங்கேற்பின் காரணமாக பின்னர் குறிப்பிடத்தக்க செயலாற்றத்தினைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் தொடர்ந்தும் போதுமான மட்டங்களில் காணப்பட்ட வேளையில், வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையின் தற்காலிக மூலமொன்றிற்காக மத்திய வங்கி இந்திய றிசேர்வ் வங்கியுடன் பரஸ்பர பரிமாற்ற ஒப்பந்தமொன்றினையும் பெடரல் றிசேர்வ் வங்கி, நியூயோர்க்குடன் மீள்கொள்வனவு ஒப்பந்தமொன்றிற்காகவும் மேற்கொண்டிருக்கிறது. இடர்ப்பாடான நிலைமைகள் காணப்படுகின்ற போதும், மத்திய வங்கி ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக உள்நாட்டு

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினைத் தொடர்ந்தும் கொள்வனவு செய்தமையின் மூலம் 2020 காலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 300 மில்லியன் கொண்ட தேறிய கொள்வனவுகள் பதிவுசெய்யப்பட்டன. ஏற்றுமதிகளை ஊக்குவித்தல், உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் இறக்குமதிச் செலவினத்தினைக் குறைத்தல் என்பனவற்றிற்கான கொள்கைகள் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் சந்தைக் கொள்வனவுகளின் உத்வேகத்தினைப் பேணுவதற்கு உதவுமெனவும் எதிர்காலத்தில் வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

2020ஆம் ஆண்டுப்பகுதியில் இறைத் துறையின் செயலாற்றம் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அரச அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் கணிசமானளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. உருவான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை முழுவதும் குறைந்த செலவினைக் கொண்ட உள்நாட்டு மூலங்களினூடாக நிதியிடப்பட்டிருக்கிறது. இது இறை அழுத்தங்களைப் பெருமளவிற்குக் குறைத்திருக்கிறது. அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் அபிவிருத்தி சார்ந்ததாக இருப்பதனால் அது உள்நாட்டு உற்பத்தி பொருளாதாரத்தினை ஊக்குவிக்கின்றது. நடுத்தர காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்காக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களின் நடைமுறைப்படுத்தல்கள் முன்னோக்கிய காலத்தில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினையும் அரச படுகடனின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் உறுதிப்படுத்துவதில் முக்கியமானவையாக அமையும்.

உலகளாவிய நோய்த்தொற்றினால் அளவுகடந்த நிச்சயமற்ற தன்மைகளும் முன்னொருபோதுமில்லாத சவால்களும் ஏற்பட்டிருந்தமைக்கிடையிலும் 2020 காலப்பகுதியில் உள்நாட்டு நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு பேணப்பட்டிருக்கிறது. கொவிட்-19 திடீர் பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிப்பதற்காக நிதியியல் நிறுவனங்களுக்கு திரவத்தன்மையினையும் நெகிழ்ச்சித்தன்மையினையும் வழங்குவதற்காக அதிவிசேடமான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் தொடரொன்றினை மத்திய வங்கி மேற்கொண்டிருந்தது. அதேவேளையில், இடர்ப்பாட்டிலுள்ள வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் உரிமத்தினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய கம்பனிகளின் வைப்பாளர்களுக்கு மீள்கொடுப்பனவுகளைச் செலுத்துகின்ற செயன்முறைச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. வங்கியல்லா நிதியியல் துறையில் காணப்படும் பலயீனங்களையும் இடர்நேர்வுகளையும் கட்டுப்படுத்தும் பொருட்டு தாக்குப்பிடிக்கக்கூடியதும் நன்கு செயலாற்றக்கூடியதுமான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை நிறுவுவதற்கான முதன்மைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

2020இல் மத்திய வங்கி கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக புதிய தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அதன் முயற்சிகளை இரட்டிப்பாக்கியிருக்கிறது. உலகளாவிய நோய்த்தொற்றின் போது நாணயத்திற்கான அதிகரித்த கேள்வி பூர்த்தி செய்யப்பட்ட வேளையில், மற்றைய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் தடங்கலற்ற தொழிற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டன. பொதுமக்களினால் டிஜிட்டல் கொடுப்பனவுப் பொறிமுறைகள் பயன்படுத்தப்படுவதனை ஊக்குவிக்கும் பொருட்டு 2020ஆம் ஆண்டு டிஜிட்டல்

கொடுக்கல்வாங்கல்களின் ஆண்டாகக் குறித்துரைக்கப்பட்டதுடன் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காகவும் அத்தகைய பொறிமுறைகள் பொதுமக்களிடையே சென்றடைவதற்காகவும் அநேக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாம் செயற்படுத்துகின்றவாறு, பொதுமக்கள் இந்த கூடியளவு வினைத்திறன்மிக்க கொடுப்பனவு முறைமைகளை அதிகரித்தளவில் பயன்படுத்திக் கொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கிறோம்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற முறையில், உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் மத்திய வங்கி முன்மதியுடைய முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமும் அதன் உறுப்பினர்களின் தேவைப்பாடுகளைச் சரியான நேரத்தில் வினைத்திறனான முறையில் பூர்த்தி செய்ததன் மூலமும் அதன் முகாமைத்துவத்தினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

பொதுப்படுகடன் முகாமைத்துவமானது கடுமையானதொரு சவால்மிக்க சூழ்நிலைகளின் கீழ் காத்திரமான முறையில் மேற்கொள்ளப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோன்றிய பேரண்டப் பொருளாதார அழுத்தங்களின் ஆண்டின் தொடக்கத்திலிருந்து முழு ஆண்டிற்குமான வரவு செலவுத்திட்ட ஒதுக்கங்கள் இல்லாமை மற்றும் பல்வேறுபட்ட தடைகள் இலங்கை போன்ற நாடுகள் பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகுவதற்கு தடைகள் காரணமாக படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகள் பல்வேறு சவால்களையும் எதிர்நோக்கின. எனினும், தற்பொழுது காணப்படுகின்ற கொள்கை சூழல் மற்றும் தூண்டுதலளிக்கும் உள்நாட்டு திரவத்தன்மை நிலைமைகள் என்பனவற்றின் அநுகூலத்தினைப் பயன்படுத்திக் கொண்டு, 2020இல் அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் நிதி அமைச்சின் ஒத்துழைப்புடன் முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவ உபாயமொன்றினை மத்திய வங்கி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. மேலும், பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் சாதனங்களை அடிப்படையாகக் கொண்ட நிதிகளைத் திரட்டுவதில் காணப்பட்ட சவால்களுக்கு மத்தியில் நிதியிடலில் இரு பல்புடை மற்றும் பல்புடை மூலங்களையும் கூட்டுக்கடன் தேர்வுகளையும் கண்டறிவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்ட வேளையில் அரசாங்கத்தின் அனைத்துப் படுகடன் கடப்பாடுகளையும் சரியான நேரத்தில் மேற்கொள்வதற்கும் வசதியளித்தது.

பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பில் நிதியியல் உளவறிதல் பிரிவானதும் ஏனைய ஆர்வலர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட பணிகளை அங்கீகரிக்கின்ற விதத்தில் 2019 ஒத்தோபரில் நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினால் ‘‘சாம்பல் நிறப்பட்டியல்’’ இலிருந்து இலங்கை நீக்கப்பட்டதனைத் தொடர்ந்து பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் அமைப்பில் உபாயக் குறைபாடுகளைக் கொண்டிருக்கும் உயர் இடர்நேர்வுகளைக் கொண்டுள்ள மூன்றாம் நாடுகளின் பட்டியிலிருந்து 2020இல் ஐரோப்பிய ஆணைக்குழு இலங்கையை நீக்கியது.

இவ்வாண்டுப்பகுதியில், மத்திய வங்கி அதன் பிரதேச அபிவிருத்தி தொழிற்பாடுகளை வலுப்படுத்தியது. மத்திய வங்கி கொவிட்-19 சௌபாக்கியா புத்துயிரளித்தல் கடன் திட்ட வசதிகளை 3 கட்டங்களில் தொழிற்படுத்தியதன் மூலம் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் மத்திய வங்கி ஆதரவளித்தது. ஆறு

பிரதேச அலுவலகங்களின் உதவியுடன் ஏனைய அபிவிருத்தி நோக்குடைய கடன் திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டமைக்கு மேலதிகமாக, மத்திய வங்கி, நாட்டில் நிதியியல் வசதிக்குட்படுத்தல் வசதியின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான அதன் பணியில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிக்கும் நோக்குடன் தொடர்ச்சியாகத் தொழிற்பட்டது.

மேலே எடுத்துக்காட்டப்பட்டவாறு, 2020ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கி, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பொருளாதாரப் பாதிப்பினைத் தளர்த்துவதில் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றியது. எனினும், உலகளாவிய நோய்த்தொற்றின் அச்சுறுத்தல் இன்னமும் பாரியதாக இருப்பதனால் 2021இலும் பல்வேறு சவால்கள் காணப்படவே செய்கின்றன. எனினும், ''நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சுபீட்சத்தின் நோக்கு'' என்ற அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பில் எதிர்பார்க்கப்பட்டவாறு உயர் வளர்ச்சிப் பாதைக்கு முழுமையாக மாறிச் செல்வது நாட்டினால் எதிர்நோக்கப்படும் முக்கியமாக அநேகப் பிரச்சனைகளையும் தீர்வு காண்பதற்கு அவசியமானது என்பதனை நாம் நம்புகிறோம். தாழ்ந்த பணவீக்கச் சூழல் மற்றும் நன்கு முறைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றின் பின்னணியில், மத்திய வங்கியின் கொள்கைக் கட்டமைப்பு நடுத்தர காலத்தில் இவ்வுயர் வளர்ச்சிப் பாதையை அடைவதற்கு தூண்டுதலாக அமையும். உண்மையில் வங்கி நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்காகத் தொடர்ந்தும் பணியாற்றும் என்பதுடன் விலை உறுதிப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய ஏதேனும் கேள்வித் தூண்டல் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக விலை அபிவிருத்திகளின் மீது தொடர்ந்தும் விழிப்புடன் இருந்துவரும்.

மேற்குறிப்பிட்டவை வழிகாட்டல் - 2021 இற்கான பின்னணியினை வழங்குகின்றன. இங்கு சமர்ப்பிக்கப்படுகின்ற மத்திய வங்கியின் பரந்த கொள்கைக் கட்டமைப்பு பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களும் அண்மையிலிருந்து நடுத்தர காலப்பகுதி வரைக்குமான தமது சொந்த கொள்கை நிகழ்ச்சிநிரல்களை அபிவிருத்தி செய்வதற்கு ஊக்குவிப்புக்களை வழங்கும்.

வழிகாட்டல் 2021 இங்கே காட்டப்பட்டவாறு மூன்று பிரிவுகளின் கீழ் காட்டப்படுகிறது:

**பிரிவு 2:** 2021 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணயக் கொள்கை உபாயம் மற்றும் கொள்கைகள்

**பிரிவு 3:** 2021 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் உறுதிப்பாட்டுடன் தொடர்பான மத்திய வங்கியின் கொள்கைகள் மற்றும்

**பிரிவு 4:** துணை மற்றும் முகவர் தொழிற்பாடுகளுடன் தொடர்பான கொள்கைகள்.

## 2. 2021 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணயக் கொள்கை உபாயங்கள் மற்றும் கொள்கைகள்

உலகளாவிய பொருளாதாரத்தின் மற்றைய நாடுகளிலுள்ளதைப் போன்றே, 2020இல் குறிப்பாக இரண்டாம் காலாண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்க பொருளாதாரப் பின்னடைவுகளினால் பாதிக்கப்பட்டது. பணவீக்கம் தொடர்ந்தும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தமையின் காரணமாக மத்திய வங்கி உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட உண்மைப் பொருளாதாரத்திற்கு உதவுவதற்காக முன்னொருபோதுமில்லாத அளவிற்கு பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது. இவ்வழிமுறைகள், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தூண்டல் நிகழ்ச்சித்திட்டங்களுடன் சேர்ந்து, 2020இன் மூன்றாம் காலாண்டுப்பகுதியில், பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க சிறந்த மீட்சியொன்றிற்கு வழிவகுத்தது. எனினும், திடீரென தொற்றிய கொவிட்-19இன் இரண்டாம் அலை ஆண்டின் இறுதிக் காலாண்டுப்பகுதியில் பொருளாதார மீட்சியின் உத்வேகத்தினை ஓரளவிற்குத் தடைசெய்துவிட்டது. 2020இன் முதற்காலாண்டில் சிறிதளவிலான சரிவு, இரண்டாம் காலாண்டில் ஒப்பீட்டளவில் பாரியளவிலான வீழ்ச்சியினைத் தொடர்ந்து மூன்றாம் காலாண்டில் சிறிதளவிலான சாதகமான வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. நான்காம் காலாண்டில் அவதானிக்கப்பட்ட அப்பங்குகளைக் கருத்திற்கொண்டு பொருளாதாரத்தில் 3.9 சதவீத அளவிலான வீழ்ச்சியினை ஆண்டில் எதிர்பார்க்கின்றோம். சவால்நிறைந்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில், பொருளாதாரத்திற்குப் போதுமான தூண்டுதல்களை வழங்குவதற்கு நாணய மற்றும் இறைத் தலையீடுகளூடாகத் தொடர்ந்தும் ஆதரவினை வழங்குவது மிக இன்றியமையாதது என்ற கருத்தினை மத்திய வங்கி கொண்டிருக்கிறது. ஆகவே, பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியை உறுதிப்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கி தற்பொழுது காணப்படுகின்ற தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினை 2021இலும் தொடரும். அத்துடன் நிச்சயமாக, பணவீக்க போக்குகளின் மீது ஏதேனும் கேள்வித்தூண்டல் அழுத்தங்கள் ஏற்படுகின்றதா என்பதனையும் நெருக்கமாகக் கண்காணித்து வருவோம்.

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளத்திற்கு கீழேயே தொழிற்பட்டு வருகின்றது என்பது நன்கறிந்த ஒரு விடயமாகும். இந்நிலைமை கொவிட்-19இன் திடீர் பரவலினால் மேலும் பெரிதாகியிருக்கிறது. 2020இல் அறிமுகப்படுத்தப்பட்ட வளர்ச்சிக்கு தூண்டுதலளிக்கும் கொள்கை வழிமுறைகள் உண்மைப் பொருளாதாரத்திற்குள் காத்திரமான விதத்தில் ஊடுகடத்தப்படும் என நாம் நம்புகிறோம். இழக்கப்பட்ட உத்வேகத்தினை மீண்டும் பற்றிப்பிடிக்கவும் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதாரத்தின் உயர் வளர்ச்சிப் பாதையுடன் இதனை உறுதியானதொரு முறையில் மீள அணிப்படுத்திக் கொள்ளவும் இன்னும் சில காலம் தேவைப்படக்கூடும். தற்பொழுது காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க நாணய விரிவாக்கம் காணப்பட்ட போதும் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளத்தையும் முழுமையாக அடையும் வரை, குறிப்பிடத்தக்க உள்நாட்டுக் கேள்வி அழுத்தம் எதுவும் ஏற்படும் போல் தோன்றவில்லை. பணவீக்க நடுத்தர காலப்பகுதியில், இலக்கிடப்பட்ட வீச்சான 4 – 6 சதவீதங்களுக்கிடையில் காணப்படும் என்ன நம்பிக்கை காணப்படுகின்ற போதும் மத்திய வங்கி இது தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிப்பினை மேற்கொண்டேவரும். உலகளாவிய பெற்றோலிய விலைகளில் ஏற்படும் அதிகரிப்புக்கள் உலகளாவிய கேள்வியில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்கள் அதேபோன்று உள்நாட்டு

வழங்கல்பக்கத்துக் காரணிகளிலிருந்து தோன்றக்கூடிய அழுத்தங்கள் போன்ற புறக்காரணிகளிலிருந்து பணவீக்க இடர்நேர்வுகள் தோன்றக்கூடும் அத்தகைய வழங்கல்பக்க காரணங்களைக் கட்டுப்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த அரசாங்கத்தின் கொள்கைகள் எதிர்பார்க்கப்பட்ட வீச்சிற்குள் பணவீக்கத்தினைப் பேணுகின்ற மத்திய வங்கியின் முயற்சிகளுக்கு உதவும்.

12 ஆண்டுகால ஒற்றை இலக்க பணவீக்கத்தின் சாதனையினைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில், மத்திய வங்கி பொருளாதாரத்தில் நிரந்தரமாக ஒற்றை இலக்க வட்டி வீத அமைப்பொன்றினை நிறுவுவதற்கு எண்ணியுள்ளது. முன்னோக்கிச் செல்லும் விதத்தில் ஒற்றை இலக்க மட்டங்களில் சந்தை வட்டி வீதங்களைப் பேணுகின்றமையின் மீது நாம் தொடர்ந்தும் கவனம் செலுத்துவோம். வியாபாரச் சமூகம், ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டி வீத அமைப்பில் குறைந்த செலவினைக் கொண்ட கடன்பாட்டு வசதிகளிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும். இது, நாட்டில் முதலீடுகளையும் தொழில்முயற்சியாளர்களையும் ஊக்குவிப்பதற்கும் அதன் மூலம் பொருளாதாரத்தின் வளர்ச்சியை உயர்த்துவதற்கும் தவிர்க்க முடியாததாக இருக்கும். நீடித்தநிலையானதொரு அடிப்படையில், குறைந்த செலவில் நிதியிடல் வசதி கிடைக்கத்தக்கதாக இருப்பது தொழில்களை ஆரம்பிப்பது, புதிய கைத்தொழில்களிலும் உயர் வளர்ச்சி வாய்ப்புக்களைக் கொண்ட துறைகளிலும் துணிகர முதலீடுகளை மேற்கொள்வது உள்ளிட்ட வியாபாரங்களை ஊக்குவிக்கும்.

நிலையான வருமானத்தினைப் பெறுபவர்கள், குறிப்பாக ஓய்வுகால வருமானத்தில் தங்கியிருக்கின்ற மூத்தபிரசைகள் போன்ற குறிப்பிட்ட சமூகத்தினர் குறைந்த வைப்பு வீதங்களினால் பாதிக்கப்படுவர் என்பதனை மத்திய வங்கி தெரிந்துகொள்கின்றது. இப்பிரச்சனைக்கான நீடித்துநிலைத்திருக்கும் தீர்வு, நீண்ட கால வருமான வளர்ச்சி மற்றும் காப்புறுதி ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகால நிதியம் ஆகிய திட்டங்களுடன் தொடர்புபட்ட நிறுவனம் சார்ந்த அபிவிருத்திகளிலேயே தங்கியிருக்கிறது. சமூகத்திலுள்ள பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் போன்றோருக்கு உதவுகின்ற புதிய நிதியியல் சாதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய வங்கி நிதியியல் துறையினருடன் சேர்ந்து தொடர்ந்தும் பணியாற்றும். அரச தொழில்முயற்சிகளிலும் அதேபோன்று தனியார் துறையிலுள்ளவர்களுக்கு உதவுகின்ற விதத்தில் பங்களிப்புச் செலுத்துகின்ற ஓய்வூதியத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழிந்தவாறு தாழ்ந்த பணவீக்கம் மற்றும் தாழ்ந்த வட்டி வீத சூழலில் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படக்கூடிய குழுமத்தினருக்கு உதவுவதற்காக ஏனைய சமூக பாதுகாப்பு வலைத்திட்டங்களை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கடன்வழங்கல் வீதங்களைக் குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதும் சந்தையில் போதுமான திரவத்தன்மை மட்டங்களைப் பேணுவதும் குறைந்த செலவினைக் கொண்ட கடன்களை வழங்குதல் தனியார் துறைக்கு நிதிகளை வழிப்படுத்த உதவும். மத்திய வங்கி தனியார் துறைக்கான கொடுகடன் 2021இல் ஏறத்தாழ 14.0 சதவீதத்தினாலே விரிவடையுமெனவும் நடுத்தர காலத்தில் வருடாந்தம் குறைந்தபட்சம் ஏறத்தாழ 12.0 – 12.5 சதவீதத்தினால் விரிவடையுமெனவும் எதிர்பார்க்கிறது. இதன் மூலம் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிக்கு ஆதரவளிக்கப்படுகிறது.

குறைந்த வட்டி வீத அமைப்பினை நீடித்துநிலைத்திருக்கச் செய்வதற்கு அத்தியாவசியமல்லாத இறக்குமதிகள் மற்றும் வெளிமுக முதலீடுகள் என்ற நியதிகளில் கசிகின்ற நிதிகளை மிகக் குறைப்பது இன்றியமையாததாகும். இதன் மூலம் அத்தகைய குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் உயர்ந்த மட்ட திரவத்தன்மை போன்று எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளிலிருந்து உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரம் பயன்களைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. அனைத்து ஆர்வலர்களுடனுமான ஆலோசனைகளைத் தொடர்ந்து பொருளாதாரத்தில் அடையாளம் காணப்பட்ட துறைகளுக்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் இவ்வாண்டுப்பகுதியில் நாணயக் கொள்கை மாற்றியமைக்கப்படும் என்பதுடன் முன்னுரிமைத் துறைகள் மற்றும் வெற்றி பெறுகின்ற தொழில்துறைகளுக்கு கடன்வழங்கல் இலக்குகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

பொதுவாக, சந்தைப் பொருளாதாரக் கட்டமைப்பொன்றிற்குள் தொழிற்படுகின்ற வேளையில், 1977 இலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையின் செயலாற்றம் மிகக் கடுமையான முறையில் மீளாய்வு செய்யப்படவுள்ளதுடன், இதன் மூலம் நாடும் அதன் பொருளாதார முகவர்களும் குறுங்காலத்தில் சந்தையில் ஏற்படும் மாறுதல்கள் நிதியியல் இலாபங்களுக்கான விருப்பங்கள் என்பனவற்றினால் கிடைக்கும் நன்மைகளை விட, நீண்ட கால பேரண்டப் பொருளாதார நோக்குடன் கூடிய மிகச் சுபீட்சம் நிறைந்த நாட்டை உருவாக்குவதனை நோக்கிய அணுகுமுறைகளின் மீது கூடியளவிற்குக் கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். "நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சுபீட்சத்தின் நோக்கு" மற்றும் வரவு செலவுத்திட்டம் - 2021இல் குறிப்பிடப்பட்ட கொள்கைக் கட்டமைப்பிற்கு இணங்க அரசாங்கம் உள்நாட்டு உற்பத்திகளுக்கு, குறிப்பாக, வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகளின் முன்னேற்றுவதற்கான கொள்கை ஆதரவுகளை வழங்கி வருகிறது. இத்தகைய இறைத்தூண்டல்கள் மற்றும் உதவிகள் உள்நாட்டு மூலதன அடித்தளத்திற்கான அதிகரித்த உள்நாட்டு வழங்கல்களை மேம்படுத்துவதற்கு உதவும். உள்நாட்டு நிரம்பலில் ஏற்படும் அத்தகைய முன்னேற்றங்கள் நாடு இறக்குமதியில் தங்கியிருப்பதனைக் குறைக்கின்ற வேளையில், வேளாண்மையிலும் கைத்தொழில் உற்பத்திகளிலும் உள்நாட்டு உற்பத்தி விகிதங்களை மேம்படுத்தும். மேலும், உள்நாட்டு நிரம்பலில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்கள் இலங்கையின் ஏற்றுமதியினது உள்ளார்ந்த வளத்தினை அதிகரிக்கின்ற வேளையில் உள்நாட்டு பணவீக்கத்தில் ஏற்படுகின்ற பருவகால தளம்பல்களையும் பெருமளவிற்குக் குறைத்துவிடக்கூடும். தாக்குப்பிடிக்கக்கூடிய வளர்ச்சி மற்றும் சுபீட்சத்தினை நோக்கிய இணைக்கப்பட்ட அணுகுமுறையொன்றினை உறுதிப்படுத்தும் நோக்குடன், புதிய பேரண்டப் பொருளாதார உட்கட்டமைப்பின் இப்பண்புகள் மத்திய வங்கியின் பொருளாதார முகாமைத்துவத் தீர்மானங்களில் மிக விரைவில் உள்ளடக்கப்படும்.

சவால் நிறைந்த தருணத்தினூடாக நாம் சென்று கொண்டிருக்கின்றோம். உள்நாட்டு அதேபோன்று உலகளாவிய நாணய மற்றும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை நெருக்கமாகக் கண்காணிப்பது புதுப்பிக்கப்பட்டதுமான நேரிடக்கூடியதுமான சவால்களைக் காத்திரமான முறையில் கையாள்வதனை இயலச்செய்யும். இது தொடர்பில் நாணயக் கொள்கை வடிவமைப்பினை அறிவிப்பதற்கும் நாணயக் கொள்கை காத்திரமான முறையில் நடத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்ற விதத்தில் கிரமமான ஆய்வுகளை நடத்துவதற்கு மத்திய வங்கி மரபுவழி சார்ந்ததும் மரபுவழி சாராததுமான தரவு மூலங்களைப் பயன்படுத்திக் கொள்ளும். பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு மற்றும் வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடுகள் போன்ற மரபுவழித் தரவு மூலங்களுக்கு மேலதிகமாக, நாம் களஞ்சியங்களிலிருந்தான உயர் கால இடைவெளிகளைக்

கொண்ட தரவுகளைத் தொடர்ந்தும் பயன்படுத்திக் கொள்ளவிருப்பதுடன் புதிய அபிவிருத்திகள் பற்றிய எமது புரிதல்களை அதிகரித்துக் கொள்வதற்காக எந்திர முறையிலான பயில்தல் மற்றும் ஏனைய தரவு விஞ்ஞான உத்திகள் என்பனவற்றினை உள்ளடக்கிய நவீன உத்திகளையும் பின்பற்றுவோம். நாங்கள் எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையின் கீழ் அமைப்பியல்சார் பேரண்ட பொருளாதார மாதிரிகளிலிருந்தான நடுத்தர கால எதிர்வுகூறல்களைத் தொடர்ந்தும் பயன்படுத்துவோம் என்பதுடன் முக்கியமான ஆர்வலர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்காக பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி உட்பட, முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளின் தோற்றப்பாடு மீதான தகவல்களையும் வழங்குகிறோம். இச்செயன்முறையின் ஒரு பகுதியாக, மத்திய வங்கி, இவ்வாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து அனைத்தையுமுள்ளடக்கிய நாணயக் கொள்கை அறிக்கையொன்றினை வெளியிடுவதற்கு எண்ணியுள்ளது. இது அபிவிருத்திகளின் ஆய்வுகளையும் அதேபோன்று முக்கிய பேரண்டப் பொருளாதார மாதிரிகளின் எறிவுகளையும் தரும். இப்பேரண்டப் பொருளாதார எறிவுகளின் தொடர்பூட்டல் வெளிப்படைத்தன்மையினை அதிகரிக்குமெனவும் எதிர்காலப் பாதைகள் தொடர்பில் தெளிவான தன்மையொன்றினை வழங்குமெனவும் நடுத்தர காலத்தில் அத்தகைய பாதைகளைச் சூழ்ந்துள்ள ஏதேனும் இடர்நேர்வுகளையும் எடுத்துக்காட்டுமென நாம் நம்புகிறோம்.

2020இல் நாம் மிகக் கடுமையான சவால்மிக்க வெளிநாட்டுச் சூழலை நாம் எதிர்நோக்கியதன் காரணமாக இன்றியமையாதனவல்லாத வணிகப்பொருள் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக கடுமையான கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டியிருந்த வேளையில், நாட்டிற்குள் வெளிநாட்டுப் பாய்ச்சல்களை ஊக்குவித்தோம். அத்தகைய வழிமுறைகள் வெளிநாட்டு ஒதுக்குகளைக் குறைக்காமல், வெளிநாட்டுச் செலாவணி மீதான அழுத்தத்தினைக் கட்டுப்படுத்த உதவின. செலாவணி வீதங்களைத் தீர்மானிப்பதற்கு சந்தை விசைகளை அனுமதிப்பது தொடர்பான மத்திய வங்கியின் நிலைப்பாடு எதிர்காலத்திலும் மாற்றமின்றியிருக்கும். எனினும், சில சந்தைப் பங்கேற்பாளர்களினால் எடுக்கப்படும் ஊக நடவடிக்கைகள் அல்லது நிதிப்பாய்ச்சல் பொருத்தமின்மைகள் காரணமாக செலாவணி வீதத்தில் ஏற்படும் மிகையான ஏதேனும் தளம்பல்கள் சிறந்த பொருளாதாரத்தின் நன்மை கருதி மிகக் கடுமையான முறையில் கையாளப்படும். பொதுமக்களின் செலவில், இடர்ப்பாடான நேரங்களில் நியாயமற்ற அநுகூலங்களைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு சிலரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைச் சகித்துக் கொள்ளமுடியாது. உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது வெளிநாட்டு நிகழ்வுகள் ஏற்படுத்தும் தாக்கத்தினை தவிர்ப்பதற்காக செலாவணி வீதம் ஒரு அதிர்வு நீக்கியாக செயற்பட அனுமதிக்கப்பட்ட வேளையில், மத்திய வங்கி செலாவணி வீதத்தில் ஏற்படும் தேவையற்ற தளம்பல்களைக் குறைப்பதற்காகவும் அதேபோன்று பொருத்தமான விதத்தில் பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காகவும் 2020இல் மேற்கொண்டதனைப் போன்று உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொடர்ந்தும் தலையிடும். எதிர்பார்க்கப்பட்ட உண்மைத்துறை அபிவிருத்திகள் செலாவணி வீத உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு உதவுமென மத்திய வங்கி நம்புகிறது. வர்த்தகப் பற்றாக்குறையில் திட்டமிடப்பட்ட குறைப்பு இரட்டைப் பற்றாக்குறையில் தாக்கத்தினை ஏற்படுத்துமென நினைவில் கொள்வது சிறந்ததாகும். இது 2020ஆம் ஆண்டிற்கான தரவில் சாத்தியமானதெனக் காட்டப்பட்டிருக்கிறது.

அதேவேளை, மத்திய வங்கி அதன் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினை ஆண்டின் இறுதியளவில் அறிமுகப்படுத்தும். இது தொடர்பான பூர்வாங்க

வேலையில் கணிசமான முன்னேற்றங்கள் 2020 ஆண்டுப்பகுதியில் அடையப்பட்டன. இது நிறுவப்பட்டதும் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்களை வங்கித்தொழில் துறையினூடாக வெளிநாட்டுக் கொடுக்கல்வாங்கல்களையும் கண்காணிப்பதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய தளமொன்றினை வழங்கும். அட்டவணையிடப்பட்டவாறு இச்செயற்றிட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு இனிவரும் மாதங்களில் வங்கித்தொழில் துறையின் தொடர்ச்சியான ஒத்துழைப்பினை நாம் எதிர்பார்க்கிறோம்.

உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் அதன் பரந்த வீச்சிலான தாக்கம் என்பன எமது பொருளாதார உபாயங்கள் பற்றி எங்கள் எல்லோரையும் மீளச் சிந்திக்க வைத்திருக்கிறது. கடந்த காலத்தில் எமது நாட்டினை அபிவிருத்தி செய்வதற்கு பன்னாட்டுச் சந்தைகளிலிருந்தும் பல்புடை முகவர்களிடமிருந்தும் கடன்பெற்றோம். இதன் பலனாக எமது வெளிநாட்டுப் படுகடன் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. 2009 இலிருந்து தொடங்கிய வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகள் ஆரம்ப ஆண்டுகளில் குறைந்த மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டு 2019 – 2014 வரையான ஆரம்ப ஆறு ஆண்டுகளில் ஐ.அ.டொலர் 5,000 மில்லியன் கொண்ட மொத்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்கின. 2015 – 2019 இலிருந்தான அடுத்த ஐந்து ஆண்டுகாலப்பகுதியில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் ஐ.அ.டொலர் 12,050 மில்லியனுக்கு அதிகரித்து நாட்டின் வெளிநாட்டுப் படுகடனை வர்த்தக மூலங்களிலிருந்து கணிசமாக மேல் நோக்கித் தள்ளியது. உலகளாவிய இடர்நேர்வு பற்றி விரும்பத்தகாத நிலை மற்றும் நிதியியல் சந்தைத் தளம்பல் என்பனவற்றின் தற்போதைய சந்தை சூழ்நிலைகளில் இலங்கையின் வெளிநாட்டு நிதியிடலின் வாய்ப்புக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இப்பின்னணியில், அபிவிருத்தி செயற்றிட்டங்களில் நிதியிடுவதற்கு உள்நாட்டு நிதியிடல் மூலங்களைப் பயன்படுத்திக் கொள்வதென்ற அரசாங்கத்தின் கொள்கை முன்னெடுப்புக்கள் வரவேற்கப்படுகின்றன. இம்முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் அரசாங்கத்தினதும் அதேபோன்று தனியார் துறையினதும் வளர்ச்சி சார்ந்த முயற்சிகளுக்காக உள்நாட்டு நிதியிடல் மூலங்களின் திரவத்தன்மையினை உச்சப்படுத்தும் விதத்தில் சுறுசுறுப்புடன் செயற்படுவது அவசியமாகும்.

இச்சவால்மிக்க தருணத்தினூடாக பொருளாதாரத்தினை வழிநடத்துவதில் மத்திய வங்கியும் அரசாங்கமும் இணைக்கப்பட்ட அணுகுமுறையினைத் தொடர்ந்தும் பின்பற்றும். அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட நடுத்தர கால இறைக் கட்டமைப்பினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது இறைத்திரட்சியை மேம்படுத்துவதற்கும் 2025இல் மொ.உ.உற்பத்தியின் 4 சதவீத வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை இலக்கினை அடைவதற்கும் மிக முக்கியமானதாகும். நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிக்கும் அதேபோன்று விலை உறுதிப்பாட்டிற்கும் இது முக்கியமான முற்தேவைப்பாடாகவுள்ளது. தாழ்ந்த பணவீக்கம் தொடர்ந்தும் பொதுவான தாழ்ந்த வட்டி வீத அமைப்பினைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு உதவுமெனவும் அரசாங்கம் மற்றும் தனியார் துறையின் நிதியிடல் செலவுகளைக் குறைப்பதற்கும் உதவிசெய்யும். எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிப் பாதையுடன் சேர்ந்த விதத்தில் பொருளாதாரத்தினைத் தூண்டுவதற்குத் தேவையான இன்றியமையாத அமைப்பியல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தவும் நடைமுறைக்கிடவும் மத்திய வங்கி அரசாங்கத்துடன் கூட்டாகப் பணியாற்றும். அரசிறையை உயர்த்துவதனையும் அரச செலவினத்தை சிக்கனப்படுத்துவதனையும் இலக்காகக் கொண்ட வழிமுறைகளுடன் சேர்ந்து அத்தகைய அமைப்பியல் சீர்திருத்தங்களை நடைமுறைக்கிடுவது எதிர்காலத்தில் பொதுப்படுகடனின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு மிக அவசியமானதாகும். அதேவேளை, அவசியமான வரிச்

சீர்திருத்தங்கள் அதேபோன்று சட்டவாக்கச் சீர்திருத்தங்கள் என்பனவற்றினூடான முதலீட்டிற்காக அரசாங்கம் தூண்டுதலளிக்கும் சூழலொன்றினை உருவாக்கியிருக்கிறது. இதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டிற்கு உத்தரவாதம் வழங்குமொரு நாடாக இலங்கையை உருவாக்க முடியும். மேலும், அரசாங்கம் வெளிநாட்டு நிதியிடலைக் கொண்ட செயற்றிட்டங்களை நாடுவதில் அது குறிப்பிட்ட அணுகுமுறைகளைப் பின்பற்றவுள்ளமை பற்றி அறிவித்திருக்கின்ற வேளையில் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. வெளிநாட்டுப் படுகடனை சமநிலைப்படுத்தல் மற்றும் உள்நாட்டு அதேபோன்று வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கல் என்பன எதிர்காலத்தில் அரச படுகடனை திரட்சிப்படுத்துவதற்கான பாதைக்கு வழிவகுக்கும் அதேவேளையில் அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் செலாவணி வீதங்கள் மீதான அழுத்தங்கள் குறைக்கப்படும். கவர்ச்சிகரமான வியாபார மையமொன்றாக கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயமாக அபிவிருத்தி செய்யவும் பண்ட வர்த்தகப்படுத்தல் மையங்களாக கொழும்பையும் அம்பாந்தோட்டையையும் மேம்படுத்தவும் உபாய அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் முதலீட்டாளர்களுக்காக நவீன முதலீட்டு வலயத்தினை உருவாக்கவும் 2021 வரவு செலவுத்திட்டத்தில் காணப்படும் முன்மொழிவுகள் எதிர்காலத்தில் கணிசமானளவு வெளிநாட்டு முதலீடுகளை நாட்டிற்குள் கவர்ந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. நேரடி முதலீடுகளின் நியதிகளில் எதிர்பார்க்கப்படும் உட்பாய்ச்சல்கள், ஏற்றுக்கொள்ளத்தக்க செயற்றிட்டக் கடன்கள் மற்றும் நட்பு நாடுகளிலிருந்தான ஆதரவு, செலாவணி வீதத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தாமல் மத்திய வங்கி கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற ஏற்றுமதிப் பெறுகைகளில் கணிசமான பகுதி, சந்தைகளிலிருந்தான தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பன ஒன்றுசேர்ந்து இவ்வாண்டுப்பகுதியில் போதுமான ஒதுக்கு மட்டங்கள் பேணப்படுவதனை இயலுமைப்படுத்தும்.

மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கைத் தீர்மானங்களை முன்கூட்டியே வெளியிடப்பட்ட நாட்காட்டியின் அடிப்படையில் தொடர்ந்தும் அறிவிக்கும். 2021ஆம் ஆண்டிற்கான வெளியிடப்படும் திகதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன:

**2021இல் நாணயக் கொள்கை அறிவித்தல்களுக்கான முன்கூட்டியே வெளியிடப்பட்ட நாட்காட்டி**

| அறிவித்தல் இலக்கம் | அறிவித்தல் திகதி |
|---|---|
| 1 | சனவரி 19, செவ்வாய்க்கிழமை |
| 2 | மாச்சு 04, வியாழக்கிழமை |
| 3 | ஏப்பிறல் 08, வியாழக்கிழமை |
| 4 | மே 20, வியாழக்கிழமை |
| 5 | யூலை 08, வியாழக்கிழமை |
| 6 | ஓகத்து 19, வியாழக்கிழமை |
| 7 | ஒத்தோபர் 14, வியாழக்கிழமை |
| 8 | நவெம்பர் 25, வியாழக்கிழமை |

## 3. 2021 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைக் கொள்கைகள்

எதிர்வரும் காலத்தில் உயர்ந்ததும் தாக்குப்பிடிக்கக்கூடியதுமான பொருளாதார வளர்ச்சி உத்வேகத்தினை அடைவதற்கு பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளினதும் பங்களிப்பு தவிர்க்க முடியாததாகும். மூலவளங்களின் வினைத்திறன்மிக்க ஒதுக்கீடுகளினூடாக உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதில் நாட்டின் நிதியியல் துறை இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது. கொவிட்-19இன் திடீர் பரவலின் காரணமாக நிதியியல் முறையில் உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற மத்திய வங்கியின் பொறுப்பாணையினைக் கொண்டு நடத்துவதில் 2020இல் சவால்கள் காணப்பட்டன. வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட விளைவுகள் நிதியியல் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மைக்கு பரீட்சையாக அமைந்தன. சவால்மிக்க உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிலைமைகளுக்கு மத்தியிலும் நிதியியல் துறையின் இயக்கவாற்றலையும் மீளெழுச்சியையும் பேணுவதற்கான மத்திய வங்கியின் முயற்சிகள் வினைத்திறன் மிக்க மேற்பார்வை, ஒழுங்குவிதிகள், முன்மதியுடைய இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நம்பகமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் என்பனவற்றைத் தேவைப்படுத்துகின்றன.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக, மத்திய வங்கி அதன் சொந்த முன்னெடுப்புக்களின் மூலமும் அதேபோன்று நிதியியல் முறைமை மூலமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நிவாரண வழிமுறைகளை வழங்குவதற்காக மேதகு சனாதிபதியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் மீது அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு வசதியளிக்கின்ற விதத்திலும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன்பொருட்டு, 2020ஆம் ஆண்டுப்பகுதியில் பல்வேறு கொள்கை, தொழிற்பாட்டு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டன. உலகளாவிய நோய்த்தொற்று பெரும்பாலான வியாபாரங்களினதும் தனிப்பட்டவர்களினதும் காசுப்பாய்ச்சலைப் பாதித்தமையின் காரணமாக, தயாரிப்பு, பணிகள், வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத் துறைகளில் ஈடுபட்டுள்ள தகைமையுடைய செயற்படுகின்ற மற்றும் செயற்படாத சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு படுகடன் சட்ட இசைவுத்தாமதம் மற்றும் தொழிற்படும் மூலதன வசதிகள் என்பன உள்ளிட்ட தொடர்ச்சியான சலுகைகளை வழங்குவதற்கு மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு கட்டளைகளைப் பிறப்பித்தது. கொவிட்-19 இரண்டாவது அலையின் காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்படும் இடர்ப்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை மேலும் நீடிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் சமமான மாதாந்த தவணைக் கடன்கள் தொடர்பான சட்ட இசைவுத்தாமத காலப்பகுதிக்காக விதிக்கப்படும் மேலதிக வட்டியினை ஆண்டிற்கு 7.00 சதவீதத்திலும் பொதுப் போக்குவரத்துப் பணிகளை வழங்குகின்ற பேருந்துகளுக்கு வழங்கப்பட்ட குத்தகைக்குவிடும் வசதிகளுக்கான வட்டியினை ஆண்டொன்றிற்கு 4.00 சதவீதத்திலும் மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டன. தகைமையுடைய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கடன்பாட்டாளர்களுக்காக கொடுகடன் ஆதரவுத் திட்டங்களும் கூட நடைமுறைக்கிடப்பட்டன. இது தொடர்பில், மத்திய வங்கி, தகைமையுடைய வாடிக்கையாளர்களின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை சலுகை வட்டி வீதங்களில் வழங்குவதற்கு வங்கிகளுக்கு

வசதியளித்தது. சிறிய கடன்பாட்டாளர்களுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன், காசோலைத் திரும்பல்கள், கொடுப்பனவுகளை நிறுத்துதல், கொடுகடன் வசதிகள் மீதான தாமதக் கொடுப்பனவு என்பன மீதான கட்டண விதிப்புக்களை வங்கிகள் நிறுத்திக் கொண்டன. செயற்படாக் கடன்பாட்டாளர்கள் மீதான அறவிடல் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதுடன் செயற்படாக் கடன்களின் மீது விதிக்கப்பட்ட தண்ட வட்டி வீதமும் தள்ளுபடி செய்யப்பட்டது.

சிறிய கடன்பாட்டாளர்களுக்கான சலுகையொன்றாகவும் நாணய ஊடுகடத்தல் பொறிமுறையினை முன்னேற்றுவதற்காகவும் கொடுகடன் அட்டைகள், அடகுபிடித்தல், முன்கூட்டியே ஒழுங்குசெய்யப்பட்ட மேலதிகப் பற்றுக்கள், தண்ட வீதங்கள் மற்றும் வீடமைப்புக் கடன்கள் போன்ற கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை மத்திய வங்கி மிகையானது எனக் கருதுகின்ற குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு இலக்கிடப்பட்ட வழிமுறையொன்றாக விதித்தது.

பொருளாதாரத்திலுள்ள ஏனைய துறைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில், அவற்றின் நிதியியல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கின்ற நிதியியல் துறையின் நோக்கத்திற்காக, மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அதிவிசேடமான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் மூலம் வங்கிகளுக்கு வழங்கப்பட்ட திரவத்தன்மையானது திரவத்தன்மையின் மீது ஏற்படக்கூடிய ஏதேனும் மோசமான தாக்கத்தினை வெற்றிகொள்ளும் என எதிர்பார்க்கப்பட்ட வேளையில் நிதியியல் துறை மீதான அழுத்தங்களையும் தளர்வுறச் செய்தது. அதேநேரம், உலக வங்கி, பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல்புடை நிதியியல் அமைப்புக்களின் முதலீடுகளூடாக வங்கித்தொழில் முறைமைக்கு நன்மைகளை வழங்குவதனைப் பரிசீலனையில் கொண்டு வங்கித்தொழில் பணிப்புரைகளுக்கு குறிப்பிட்ட திருத்தங்கள் செய்யப்பட்டன.

இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் வங்கித்தொழில் துறை 2020இல் விரிவடைந்தமைக்கு கம்பனி வருமானம் மற்றும் ஏனைய வரி வீதங்களில் செய்யப்பட்ட குறைப்பு ஆதரவாக விளங்கியதுடன் இதன் காரணமாக வரிக்குப் பின்னரான இலாபத்திலும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாயிலும் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்ட வேளையில், குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு மிக மேலாக மூலதனமும் திரவத்தன்மையும் பேணப்பட்டதன் மூலம் தாக்குப்பிடிக்கும் தன்மை எடுத்துக்காட்டப்பட்டது.

2020ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறைக்கும் நிதியியல் முறைமைக்கும் வழங்கப்பட்ட பல்வேறு வடிவங்களிலான ஆதரவும் பல்வேறுபட்ட தளர்த்தல்களும் ஒருபுறத்தில் நிதியியல் முறைமையினைப் பாதுகாப்பதனையும் மறுபுறத்தில் விரைவான பொருளாதார மீட்சிக்கு வசதியளிப்பதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆகவே, உரிமம்பெற்ற வங்கிகளும் ஏனைய நிதியியல் நிறுவனங்களும் அத்தகைய முன்னோடி நடவடிக்கைகளின் நன்மைகளை வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து வழங்குமாறும் வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் தூண்டுதலளிக்கும் விதத்தில் வியாபாரச் சூழலைப் பேணி வளர்க்குமாறும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளப்பட்டதன் மூலம் பரஸ்பரம் நன்மையளிக்கும் பொருளாதாரச் சூழலொன்றில் பொருளாதார நடவடிக்கைகள் விரைவாக மீட்சியடைவது இயலுவதாயிற்று. நிதியியல் துறை புதிய வழமையானவற்றின் பின்னணி நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டும் கூடியளவு

வாடிக்கையாளர் மையமாக மாற வேண்டுமென்பதற்காகவும் புதிய வியாபார மாதிரிகளை அபிவிருத்தி செய்தல் கட்டாயமானதாகும்.

தற்பொழுது மத்திய வங்கி, நிதியியல் குழுமங்களின் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்காக குழுமவாரியான ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வைக் கட்டமைப்பினை உருவாக்குகின்ற செயன்முறையில் ஈடுபட்டிருக்கிறது. இது அண்மிய எதிர்காலத்தில் நடைமுறைக்கிடப்படவுள்ளது. மேலும், 2021இல் மத்திய வங்கி, 2020இல் நிலவிய அசாதாரணமான சூழ்நிலைகளைப் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏனைய பல ஒழுங்குமுறைப்படுத்தல்களை மீள நடைமுறைப்படுத்துவதற்குத் தயாராகி வருகிறது. மத்திய வங்கி இவ்வாண்டுப்பகுதியில் வங்கித்தொழில் சட்டத்தினை மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்ப்பதுடன், இது நாட்டின் வங்கித்தொழில் முறைமையினை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளின் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் தரமுயர்த்துமென எதிர்பார்க்கப்படுகிறது. பெறுமதிமிக்க சிறிய சந்தைகளை அடையாளம் காண்பதற்கு அபிவிருத்தி வங்கிகள் போன்ற வங்கித்தொழில் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேலும், பாரிய வர்த்தக வங்கிகள் பிரதேச சந்தைகளை அணுகுகின்ற விதத்தில் தொடர்ந்தும் கவனத்தினைச் செலுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. சிறிய உரிமம்பெற்ற வங்கிகள் ஆற்றல்வாய்ந்த நிதியியல் நிலைமைகளையும் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வியாபார மாதிரிகளையும் கொண்டுள்ள பாரிய வங்கிகளுடன் இணைந்து கொள்வதனை இயலுமைப்படுத்துகின்ற சந்தைத் தூண்டலைக் கொண்ட ஒன்றுசேர்க்கப்படும் செயன்முறைகளைத் தூண்டுவதற்கும் வசதியளிக்கப்படும்.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, நெருக்கடிக்குத் தயாராகுவதற்கான தேவையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது. ஏதேனும் மோசமான சூழ்நிலைகளுக்குக் காத்திரமான விதத்தில் பதிலிறுத்தும் இயலாற்றலை உயர்த்துகின்ற விதத்தில் வங்கிகள் நெருக்கடிகளுக்குத் தயாராக இருக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்காக உரிமம்பெற்ற வங்கிகள் மீட்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இது தொடர்பில் வழிகாட்டல்களை வழங்குகின்ற பணிப்புரைகள் காலக்கிரமத்தில் விடுக்கப்படும். மத்திய வங்கி புதிய விதிகளுக்குப் பொருந்தத்தக்க விதத்தில் அதன் மேற்பார்வை அணுகுமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றும் என்பதுடன் பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கிகள் அவற்றின் தகவல் முறைமைகளையும் தொழில்நுட்பவியல் தளங்களையும் தரமுயர்த்தி வலுப்படுத்துவதற்காக தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் மீளெழுச்சி என்பனவற்றிற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு வங்கிகளுக்குச் சரியான முறையில் அறிமுகப்படுத்தப்படும். இது தொடர்பில் மத்திய வங்கி செயற்கை முறைசார்ந்த நுண்ணறிவு முறை மற்றும் எந்திரமுறைப் பயில்தல் என்பனவற்றின் இயலாற்றலைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் தரச் செறிவுமிக்க தலத்திற்கு வெளியேயான மேற்பார்வை தொழிற்பாட்டினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக மேற்பார்வை தொழில்நுட்பவியல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழில்நுட்பவியல் தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கண்டறியும். அத்தகைய கட்டமைப்புக்களைப் பின்பற்றுவதும் மனிதவளக் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதும் விரைவாக பரிணாமமடைந்துவரும் தொழில்நுட்பவியலினால் தூண்டப்படும் புத்தாக்கங்களின் வேகத்திற்கு ஈடுகொடுப்பதற்கு மத்திய வங்கியை இயலச்செய்யுமென்பதுடன் எதிர்வரும் காலத்தில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினையும் உறுதிப்படுத்தும்.

எதிர்வரும் காலத்தில் மத்திய வங்கி, இலங்கையில் வங்கித்தொழில் அபிவிருத்தியில் புதிய யுகமொன்றினை இயலச்செய்யும் விதத்தில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் பிரதேசிய சங்வர்த்தன வங்கி என்பனவற்றை இணைப்பதன் மூலம் உத்தேச தேசிய அபிவிருத்தி வங்கித்தொழில் கூட்டுத்தாபனத்தினை உருவாக்குவதற்கு வசதியளிப்பதில் அரசாங்கத்துடன் நெருக்கமாகப் பணியாற்றும்.

ஏனைய வியாபாரத் துறைகளுடன் சேர்ந்து, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையும் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்கின. இவ்வாண்டுப்பகுதியில் இத்துறையின் செயலாற்றம் நலிவடைந்தமைக்கு எதிர்க்கணியமான கொடுகடன் வளர்ச்சி, வீழ்ச்சியடைந்து செல்லும் இலாபத்தன்மை மற்றும் செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு என்பன காரணங்களாயமைந்தன. இத்துறையின் மெதுவான போக்கிற்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளின் விளைவாக குறைவடைந்த பொருளாதார நடவடிக்கையே முக்கியமாகப் பங்களித்தது. மத்திய வங்கி முக்கியமான முன்மதியுடைய குறிகாட்டிகளைத் தொடர்ந்தும் கண்காணித்த வேளையில், நலிவடைந்த நிதியியல் நிலைமைகளுடன் கூடிய கம்பனிகளுக்குப் புத்துயிரளிப்பது பற்றியும் பரிசீலனையில் கொண்டிருந்தது. வைப்பாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டும், நிதியியல் துறையின் நீண்ட கால உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டும் நலிவடைந்த செயலாற்றத்தினைத் தொடர்ந்தும் காட்டுகின்ற நிதிக் கம்பனிகளின் நிதி வியாபாரங்களை நிறுத்துவதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிக்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் தொழிற்பாடுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு அவற்றிற்கு நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குகின்ற விதத்தில் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு நிவாரண வழிமுறைகளை வழங்கும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் கடன்பாட்டாளர்களுக்காக விசேட கொடுகடன் ஆதரவுத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன. மேலும், உள்ளூரில் உடற்கோப்பு செய்யப்பட்ட உந்து ஊர்திகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீது விடுக்கப்பட்ட பணிப்புரைகள் திருத்தப்பட்டன. துறையானது குறிப்பிடத்தக்க அழுத்தத்தின் கீழ் காணப்பட்டமையின் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் பேணப்பட வேண்டிய திரவச்சொத்துக்கள் மீதான பணிப்புரை நடைமுறைக்கு வரும் திகதி மேலும் நீடிக்கப்பட்டது.

வைப்புக்களை ஏற்கும் வலுவான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை உருவாக்குவதில் எதிர்நோக்கிய சவால்களை மத்திய வங்கி தொடர்ந்தும் கட்டுப்படுத்தியது. வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்கும் நிதியியல் முறைமையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையினைப் பேணுவதற்குமாக நிதியியலின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் நோக்குடன் உடனடியாகச் சீர்செய்யும் நடவடிக்கைக் கட்டமைப்பு தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக்

கம்பனிகளுக்கு வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன. இது 2022 யூலையிலிருந்து நடைமுறைக்குவரும் வியாபார மாதிரிகளை வலுப்படுத்தும் பொருட்டும் குறிப்பிட்ட நிதிக் கம்பனிகள் முறிவடைவதனைத் தடுக்கும் விதத்திலும் பல்பேறு ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையினை வலுப்படுத்துவதற்கான தேவை அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் அதேபோன்று பொதுமக்களினாலும் நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இத்துறையினை மறுசீரமைத்தல் எதிர்வரும் காலத்தில் தேசிய முன்னுரிமையாகத் தொடரும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையில் காணப்படும் பலயீனங்களையும் இடர்நேர்வுகளையும் கட்டுப்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கி, நாட்டின் பொருளாதாரத் தேவைகளுக்குக் காத்திரமான விதத்தில் பங்களிப்பதனை அனுமதிக்கின்ற விதத்தில் வலுவானதும் உறுதியானதுமான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை உறுதிப்படுத்துவதற்காக நடுத்தர கால ஒன்றுதிரட்டப்பட்ட திட்டமொன்றினை முன்மொழிந்திருக்கிறது. ஆகவே, தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கு வரவிருக்கும் மாற்றங்களுடன் நடுத்தர காலப்பகுதியில் இத்துறையின் உறுதிப்பாடு மேலும் வலுப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, மத்திய வங்கியின் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புக் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டு புதிய துறைகளை உள்ளடக்கும் விதத்தில் மேலும் விரிவுபடுத்தப்படும் என்பதுடன் தற்போதுள்ள கட்டமைப்பினை உயர்த்துவதற்கான ஆய்வும் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் பரந்தளவு பொருளாதாரத்திற்கு நன்மையளிக்கின்ற விதத்தில், வலுவான நிதியியல் முறைமையொன்றினை உருவாக்கும் நோக்குடன் பேரண்ட முன்மதியுடைய கொள்கை வடிவமைப்புச் செய்முறை மீளாய்வு செய்யப்படுகிறது.

2020இல் மத்திய வங்கி காலக்கட்டமைப்புடன் கூடிய நடவடிக்கைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட நீடித்துநிலைத்திருக்கும் நிதிக்காக வழிகாட்டலை தொழிற்பாடுடையதாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. வழிகாட்டலின் கீழ் கூட்டு முன்னேற்றங்களை விரைவுபடுத்துவதற்காக, உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் ஆர்வலர்கள் நீடித்துநிலைத்திருக்கும் வசதியினை செயற்படுத்துவதனை இயலுமைப்படுத்துவதற்காக நிறுவனத் தோற்றப்பாட்டு அமைப்பு 2021இல் வடிவமைக்கப்படும்.

பணம் கடன் வழங்குகின்ற நிறுவனங்களுக்கு மிகச் சிறந்ததும் கூடியளவிற்குக் காத்திரமானதுமான ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலொன்றினை உருவாக்குவதற்காக, ஒழுங்குமுறைப்படுத்தப்படாத பணம் கடன் வழங்குகின்ற நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக சட்ட ரீதியான கட்டமைப்பொன்றினை இயற்றுவது அதிகளவிற்கு முக்கியமானதாகும். இந்நோக்கத்திற்காக, நாணயச் சபை, நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் வரைவிற்கு ஒப்புதலளித்திருக்கிறது. இச்சட்டம் இயற்றப்பட்டதுடன் இது, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை மேலும் வலுப்படுத்துவதற்கும் நாட்டில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதற்கும் உதவும்.

பரிணாமமடைந்து வருகின்ற நிதியியல் முறைமையொன்றிலுள்ள அனைத்து ஆர்வலர்களுக்கும் குறிப்பாக, உயர்ந்த இடர்நேர்வுகளுடன் அடிக்கடி சேர்ந்து காணப்படும் உயர்ந்த வெகுமதி சேர்ந்து காணப்படுகின்ற தாழ்ந்த வட்டி வீதச் சூழலைக் கொண்ட தருணத்தில் மிக முக்கியமான வகிபாகமொன்றினைக் கொண்டிருக்கின்றனர். எனவே, வைப்பாளர்கள் இடர்நேர்வுகளுக்கும் வெகுமதிகளுக்கும் சமமான விதத்தில் முன்னுரிமையளிக்கும் முதலீடுகளைத் தெரிவுசெய்தில் எப்பொழுதும் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். அதேவேளையில், வினைத்திறன் மிக்கதும் ஆற்றல்வாய்ந்ததுமான நிதியியல் முறைமையினை உறுதிப்படுத்துவதற்கு நிதியியல் நிறுவனங்கள் கணிக்கப்பட்ட இடர்நேர்வுகளை எடுத்துக் கொண்டு போட்டித்தன்மை வாய்ந்த வருவாய்களை வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றன. மறுபுறத்தில், நிதியியல் துறை கடன்வழங்கல் தொடர்பில் நீண்ட கால நோக்கினைக் கொண்டிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, சூழல் சார்ந்த உறுதிப்பாடு மற்றும் நீடித்துநிலைத்திருக்கக்கூடியதும் உள்ளடக்க வசதிக்குட்படுத்தல் அபிவிருத்தி என்பனவற்றிற்கான பங்களிப்பு போன்ற பொதுவான செயற்றிட்டத்தில் கருத்திற்கொள்ளப்படாத அம்சங்களையும் பரிசீலனையில் கொண்டிருத்தல் வேண்டும்.

2020ஆம் ஆண்டு டிஜிட்டல் கொடுக்கல்வாங்கலுக்கான ஆண்டாக குறித்துரைக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக டிஜிட்டல் கொடுப்பனவுப் பொறிமுறையினை பொதுமக்களிடையே பிரபல்யப்படுத்துவதற்காக ஆண்டு முழுவதும் பல்வேறு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாடு முழுவதையும் உள்ளடக்கிய நடைமுறைப்படுத்தப்பட்ட அத்தகைய முன்னெடுப்புக்களில் லங்காகியூஆர் ஒன்றாக விளங்குவதுடன் இது ஆர்வலர்களிடையே பரந்தளவு அங்கீகாரத்தினையும் பெற்றிருக்கிறது. உண்மையில், டிஜிட்டல் கொடுப்பனவுத் தளம் பின்பற்றப்பட்டமையானது உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மிகப் பிரயோசனமாக அமைந்தமை அதிகளவிற்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பக்கத்தில், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மீது அதிகளவு கவனம் செலுத்தப்பட்டமையின் மூலம் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் தடங்கலற்ற தொழிற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டன. ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்தல், வாடிக்கையாளர் நிதி மற்றும் தகவல்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் வினைத்திறனை அதிகரித்தல் என்பன அதிகளவிற்குக் கவனம் செலுத்தப்பட்ட துறைகளாகக் காணப்பட்டன. இதன்படி, பின்டெக்ஸ் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டமையானது புத்தாக்கச் சாதனங்களுக்கு பரீட்சிப்புத் தளமொன்றினை வழங்கியது. அத்துடன், பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் தொழில்நுட்ப பேரேட்டு நிரூபணக் கருதுகோள்கள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ஒத்துழைப்புடன் மூன்று ஆர்வம் நிரம்பிய பங்களிப்பாளர்களினால் உருவாக்கப்பட்டுள்ளன. இவை தற்பொழுது பரீட்சிக்கப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர, மத்திய வங்கி இலங்கையில் திறந்த வங்கித்தொழிலுக்கான நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் பற்றி தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. இலங்கையில் திறந்த வங்கித்தொழிலுக்காக கட்டமைப்பொன்றினை நடைமுறைக்கிடுவது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மத்திய வங்கி வதியும் இலங்கையர்களுக்கு கொடுப்பனவு பெறுகை வசதிகளை இயலுமைப்படுத்துவதற்காக *''பேபல்''* போன்ற பன்னாட்டு கொடுப்பனவுப் பணி வழங்குபவர்களுடன்

கலந்தாராய்வுகளை ஏற்கனவே தொடங்கியுள்ளதுடன் அண்மைய எதிர்காலத்தில் சாதகமான பெறுபேறுகள் கிடைக்குமெனவும் எதிர்பார்க்கிறோம். உலகளாவிய நிதியியல் கட்டமைப்பின் எதிர்காலம் கட்டாயமாக டிஜிட்டலாக இருக்குமென்பதனால் மத்திய வங்கி செலவு நன்மைகளை முழுமையாகப் பகுப்பாய்வு செய்வதனையும் நீண்ட கால நோக்கினையும் பயன்படுத்தி டிஜிட்டல் நாணயங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஆர்வலர்களுடன் தொடர்ந்தும் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

உத்வேகம் மிக்க தீர்வுக் கட்டமைப்பு என்பது ஆரோக்கியமான நிதியியல் முறையின் இன்றியமையாத பாகமொன்றாகும். ஒட்டுமொத்த நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற அதேவேளையில் உறுதியற்ற தொழிற்பாட்டாளர்கள் ஒழுங்கானதொரு விதத்தில் முறைமையிலிருந்து வெளியேறுவதனை அனுமதிக்கின்ற நோக்குடன் கூடிய அத்தகைய கட்டமைப்பொன்றினை நடைமுறைக்கிடக்கூடிய வழிமுறைகளை ஏற்கனவே மேற்கொண்டிருக்கிறது. நிதியியல் நிறுவனமொன்று முறிவடைகின்ற சந்தர்ப்பத்தில் வினைத்திறன்மிக்கதும் காத்திரமானதுமான இழப்பீட்டுக் கொடுப்பனவுப் பொறிமுறையொன்றினை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்ட ஒழுங்குவிதிகளைத் திருத்துகின்ற வேலைகளை நாம் ஏற்கனவே தொடங்கிவிட்டோம். நிதியியல் நிறுவனமொன்று முறிவடைகின்ற சந்தர்ப்பத்தில் பரவக்கூடிய தாக்கத்தினையும் உண்மைப் பொருளாதாரத்தின் மீது கசியக்கூடிய விளைவுகளின் தாக்கத்தினையும் தணிப்பதற்கு தீர்மானக் கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கி வழிமுறைகளை மேற்கொள்ளும்.

2020ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையரின் நிதியியல் சந்தைகளினால் எதிர்நோக்கப்பட்ட பிரதான சவால் யாதெனில் உள்நாட்டு மூலதனச் சந்தைகளிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் கணிசமானளவில் வெளிப்பாய்ந்தமையேயாகும். உள்நாட்டு மூலதனச் சந்தையில் பாரிய பங்கைக் கொண்டிருந்த அரச பிணையங்கள் சந்தை மூன்றாம் காலாண்டு இறுதியளவில் சில மீட்சிகளைக் காட்டிய போதும் 2020இன் முதல் ஒரு சில மாதங்களில் வெளிநாட்டு முதலீடுகளின் குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. தோற்றம்பெற்று வருகின்ற பெரும்பாலான மற்றைய சந்தைகளைப் போன்றே இலங்கையின் பங்குரிமை மூலதனச் சந்தையும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட அதிகளவிற்கு நிச்சயமற்ற தன்மைகளின் பின்னணியில் 2020இல் அதிகரித்தளவு தளம்பல்களைக் கொண்டிருந்தது. எனினும், மேம்பட்ட சந்தைச் சுட்டெண்கள் மற்றும் உயர்ந்த மொத்தப் புரள்வு என்பனவற்றின் காரணமாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஆசிய பிராந்தியத்திலுள்ள மிகச் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்ட சந்தைகளிலொன்றாக மாறியது. முன்னோக்கிச் செல்கையில், கடந்த காலத்தினைப் போன்று நாடு இனியும் உயர்ந்த வட்டி வீதச் சூழலைத் தாங்கிக் கொள்ள முடியாது என்பதனால் மூலதனச் சந்தைகள் பெருமளவு வகிபாகத்தினை ஆற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. சேமிப்பாளர்களுக்குச் சிறந்த வருவாய்களை உறுதிப்படுத்துகின்ற வேளையில் வியாபாரங்களுக்கு நிதியிடுகின்ற பங்குரிமையினை அடிப்படையாகக் கொண்ட மற்றும் ஏனைய வகைகளை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்கு நன்கு அபிவிருத்தியடைந்த மூலதனச் சந்தைகள் இன்றியமையாதனவாக இருக்கும்.

எதிர்வரும் காலப்பகுதியில் பொருளாதாரம் மீண்டும் திடீரென முழுமையாக எழுச்சிபெறுமென எதிர்பார்க்கப்படுவதனால் இலங்கையின் நிதியியல் சந்தைகளும் ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகளும் உறுதியான முதலீடுகளைக் கவரும் விதத்தில் தேவையான மாற்றங்களை வரவேற்பதற்கு ஆயத்தமான நிலையில் இருத்தல் வேண்டும். விசேட பொருளாதார வலயமான கொழும்பு துறைமுக நகரின் விரைவான அபிவிருத்தியும் அதன் வர்த்தக மற்றும் சில்லறை சொத்துக் கூறுகளும் 2021இன் நடுப்பகுதியில் மாபெரும் முன்னேற்றத்தினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதனால் அது நிதியியல் துறையின் வளர்ச்சிச் செயலாற்றத்தின் ஊக்கியாக விளங்கும். துறைமுக நகருக்காக எதிர்பார்க்கப்படும் விசேட சட்டவாக்கத்துடன் தேசிய நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் தடங்கலற்ற சகவாழ்வினை உறுதிப்படுத்துவதற்காக, மத்திய வங்கி கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்திற்காகத் தேவைப்படுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்துடன் இணைந்து தீவிரமாகப் பணியாற்றும்.

## 4. பரந்தளவு பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள்

இதுவரை நாம் மத்திய வங்கியின் மையத் தொழிற்பாடுகள் பற்றியும் தொடர்பான திட்டங்கள் மற்றும் கொள்கைகள் பற்றியும் ஆராய்ந்தோம். இப்பொழுது நான் மத்திய வங்கியின் துணை மற்றும் முகவர் தொழிற்பாடுகளின் பக்கம் எனது கவனத்தினைத் திருப்புகிறேன். மத்திய வங்கி இவற்றில் ஈடுபட்டிருக்கின்ற வேளையில் நிதியியல் முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டிற்கும் பரந்தளவு பொருளாதாரத்தினை மேலும் வலுப்படுத்துவதற்கும் ஆதரவளிக்கின்றது.

***நாணய முகாமைத்துவம்***

நீங்கள் எல்லோரும் அறிந்தவாறு, இலங்கையில் நாணய வெளியீட்டுத் தொழிற்பாடுகளை முகாமைப்படுத்துவது தொடர்பில் மத்திய வங்கி பிரத்தியேகமான உரிமைகளைக் கொண்டிருக்கிறது. தொழில்நுட்பவியல் தூண்டுதலுடன் கூடிய காசல்லா கொடுப்பனவு மாதிரிகளின் பயன்பாட்டிற்கு நாம் தொடர்ந்தும் வசதியளித்து வருகின்றோம். எனினும், நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நாணயத்திற்கான கேள்வியில் அதிகரிப்பொன்று காணப்பட்டதை சான்றுபடுத்தியது. இது போன்ற நெருக்கடியான நேரத்தில் முன்னெச்சரிக்கை கலந்த எண்ணத்தினால் கூடியளவு நாணயங்களை வைத்திருக்க வேண்டுமென்ற பொதுமக்களிடையே காணப்படும் நாட்டம் காரணமாக நாணயத்திற்கான கேள்வியை உலகளாவிய நோய்த்தொற்று தூண்டியிருக்கின்றது போல் தெரிகிறது.

உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் காசுத் தொழிற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான நாம் அரசாங்கத்தின் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி காசினை மாற்றிக் கொள்ளும் கருமபீடங்களைத் திறந்ததுடன் பயன்படுத்த முடியாத நாணயங்களையும் ஏற்று வருகின்றோம். காசுத் தொழிற்பாடுகளின் சுமுகமான இயக்கத்திற்கு வசதியளிப்பதற்காக மத்திய வங்கி, பயன்படுத்தக்கூடிய மிகையான நாணயத் தாள்களை மத்திய வங்கிக்கு வராமல் வங்கிகளிடையே மாற்றிக் கொள்ளக்கூடிய பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறது. பயன்படுத்தக்கூடிய தரமான நாணயத் தாள்களை வங்கிகளிடையே மாற்றிக் கொள்வதற்கு வசதியளிக்கின்ற தொழில்நுட்பத் தளமொன்று எதிர்வரும் காலத்தில் நடைமுறைக்கிடப்படும். மேலும், தொடர்ச்சியாக நாணய இருப்புக்கள் பேணப்படுவதனை வலுப்படுத்துவதற்காக ஒரு பகுதி நாணயத் தாள்களையும் குற்றிகளையும் மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலிருந்து மேல் மாகாணத்திற்கு வெளியே புதிதாக நிறுவப்பட்டுள்ள எதிர்பாராத நிகழ்வுகளுக்கான பாதுகாப்பு நிலவறைகளுக்கு மாற்றுவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.

2020இல் மத்திய வங்கி அதன் 70ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது. இந்நிகழ்வினை குறிப்பிடும் விதத்தில் ரூ.20 பெறுமதி கொண்ட சுற்றோட்டத்திற்கு விடப்படாத ஞாபகார்த்த நாணயக் குற்றியொன்று வெளியிடப்பட்டதுடன் சுற்றோட்டத்தரம் வாய்ந்த ஞாபகார்த்த நாணயக் குற்றி மிக விரைவில் வெளியிடப்படவுள்ளது. தற்போதுள்ள 11ஆவது நாணயத் தொடர்களின் ஒரு பகுதியாக, மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புப் பண்புகளுடன் கூடிய ரூ.2,000 புதிய நாணயத் தாள் 2021இல் அறிமுகப்படுத்தப்படும்.

***பொதுப்படுகடன் முகாமைத்துவம்***

அரசாங்கத்தின் இறைமுகவர் மத்திய வங்கியாகும். அரசாங்கத்தின் நிதியிடல் தேவைகளுக்குச் சாத்தியமானளவிற்குக் குறைந்த செலவில் வசதியளிப்பதற்கான முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவத்தினை உபாய முறையில் நிறைவேற்றுவதற்கான பொறுப்பினை வழங்குகிறது. இவ்வகிபாகத்தில் வங்கி நியாயமான அளவு இடர்நேர்வுகளை மட்டும் அனுமதிக்க வேண்டுமென்பதுடன் நடுத்தர காலத்தில் படுகடன் உறுதிப்பாட்டையும் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயமானது மொத்த வெளிநின்ற படுகடனின் பங்கொன்றாக வெளிநின்ற வெளிநாட்டு நாணயப் படுகடனைக் கட்டுப்படுத்துவதன் மீதும், வெளிநாட்டு நாணயப் படுகடன் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்கான சராசரி நேரத்தினை மேம்படுத்துவதன் மீதும் படுகடன் முதிர்ச்சிப்படுத்தலை ஓராண்டிற்குள் மேம்படுத்துவதன் மீது தொடர்ந்தும் கவனம் செலுத்துவதனை வலியுறுத்துகின்றது. பேரண்டப் பொருளாதார சூழல்களுக்கு ஏற்பட்ட கடுமையான சவால்களுக்கு மத்தியிலும் 2020இல் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவு தொடர்பில் நாம் 100 சதவீதம் துல்லியமானதும் உரிய நேரத்திலுமான தீர்ப்பனவுகளைப் பேணியதுடன் இத்தகைய துல்லியமான கொடுப்பனவுகளைத் தொடரவும் எதிர்பார்க்கிறோம். எதிர்காலத்திலும் நாம் இவ்வாறு தொடர்ந்து செல்வோம்.

எதிர்வரும் காலத்திலும் அரசாங்கத்தின் அப்பழுக்கற்ற படுகடன் தீர்ப்பனவு பதிவேட்டினைத் தொடர்வதனை உறுதிப்படுத்துவதற்காக நாணயச் சபை 2020ஆம் ஆண்டிற்கான அதன் இறுதிக் கட்டத்தில் வெளிநாட்டுப் படுகடன் கண்காணிப்பு மீது இரு அடுக்குச் செயலணிக் குழுவொன்றினை நிறுவியிருக்கிறது. இச்செயலணிக்குழு நாணயச் சபை உறுப்பினர்களினால் வழிநடத்தப்படவுள்ளதுடன் வெளிநாட்டுப் படுகடன் இயக்கவாற்றலையும் மறுதலையாக ஒதுக்குகளின் போதுமான தன்மையினையும் நெருக்கமாகக் கண்காணிப்பதற்கு எண்ணியுள்ளதுடன் கிரமமான முறையில் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த விதந்துரைப்புக்களை நாணயச் சபைக்கும் அரசாங்கத்திற்கும் செய்யும்.

முன்னொருபோதுமில்லாத நாணயத் தளர்த்தல் வழிமுறைகளைத் தொடர்ந்து, அனைத்துத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் ஏலங்களுக்கான ஏற்றுக்கொள்ளலின் உயர்ந்தபட்ச விளைவு வீதம் பற்றிய ஏற்பாடுகள் 2020 மேயிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இது, அரச பிணையங்கள் வழங்கலின் சராசரிச் செலவினை முன்னொருபோதுமில்லாத குறைந்த மட்டத்திற்கு குறைப்பதற்கும் வழிவகுக்கும். முன்மதியுடைய பொறுப்பு முகாமைத்துவம் கடன்பாட்டுச் செலவினை மிகக் குறைப்பதற்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தை வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதனை இயலச்செய்யும்.

அரச பிணையங்களுக்கான முதலாந்தர ஏல பங்கேற்பின் காத்திரமான தன்மையினை அதிகரிக்கும் விதத்தில் மத்திய வங்கி, அரச பிணையங்களின் ஏலம் தொடர்பான நாட்காட்டியொன்றினைக் காலாண்டு அடிப்படையில் வெளியிடுவதற்கான அதன் முயற்சியைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2021 இலிருந்து ஏலக் கலண்டர் நிதி அமைச்சின் ஆலோசனையுடன் ஆறு மாத காலப்பகுதிக்கு அல்லது அதற்குக் கூடுதலான காலப்பகுதிக்கு வழங்கப்படும். இலங்கை அபிவிருத்தி முறிகளின்

வழங்கலுக்கு நேரடி வழங்கல் ஒழுங்குகளினூடாக வசதியளிக்கப்படும். முன்னோக்கிப் பார்க்கையில் இலங்கை மத்திய வங்கி நிலையான வீதத்தினையும் பல்நாணய இலங்கை அபிவிருத்தி முறிகளையும் வழங்கும். இதன் மூலம் நிதியியல் துறை வெளிநாட்டு நாணய வைப்புத் திரட்டலுக்கு வசதியளிக்கிறது.

2021இல், திறைசேரி முறிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் திறைசேரி முறிகளின் விடுப்பு நடைமுறையினை ஒழுங்குபடுத்துவதற்கான ஏற்பாடுகள் ஆயத்தநிலையில் காணப்படுவதுடன் 364 நாள் திறைசேரி உண்டியல்களுக்காகப் புதிய பன்னாட்டுப் பிணையங்களுக்கான அடையாள இலக்கங்களை வழங்குவதும் எஞ்சிய முதிர்ச்சிகளின் அடிப்படையில் 91 நாள் மற்றும் 182 நாள் முதிர்ச்சிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. புதிய வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட திறைசேரி உண்டியல் ஏல முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கும் திறைசேரி முறிகளுக்கான நேரடி வழங்கல்பீடத்திற்குமான வழிவகைகள் தற்பொழுது கண்டறியப்பட்டு வருகின்றன.

அரச பிணையங்கள் மற்றும் தேவையான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புடன் கூடிய உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் கொடுக்கல்வாங்கல் என்பனவற்றிற்காக அதிநவீனத்துவம் வாய்ந்த இலத்திரனியல் வர்த்தகத் தளத்தினையும் மத்திய இணைத்தரப்பு தீர்வகத்தையும் நிறுவுவது தொடர்பில் மத்திய வங்கி விரைந்து பணியாற்றி வருவதுடன் தற்போதுள்ள அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் அரச பிணையங்களுக்கான மத்திய வைப்பக முறைமை என்பனவற்றினை நவீனமயப்படுத்துவதிலும் இணைந்து செல்வதாகக் காணப்படுகிறது. மத்திய இணைத்தரப்புத் தீர்வகமானது மேலும் எதிர்காலத்தில் ஏனைய சொத்து வகுப்புக்களை உள்ளடக்குவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றது. இம்முன்னெடுப்புக்கள் நாட்டின் பணம் மற்றும் மூலதனச் சந்தைத் தொழிற்பாடுகளை அதிகரிக்குமெனவும் இணைத்தரப்பு இடர்நேர்வுகளைத் தணித்து, சந்தைத் திரவத்தன்மை, விலை தொடர்பான வெளிப்படைத்தன்மை மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கை என்பனவற்றை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதுடன் இதன் மூலம் அரசிற்கு குறைந்த கடன்பாட்டுச் செலவு ஏற்படுவதற்கும் வசதியளிக்கப்படுகின்றது.

***ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவம்***

இலங்கை மத்திய வங்கி, உறுப்பினர்களுக்குச் சாத்தியமானளவு உயர்ந்தபட்ச வருமானத்தினை வழங்கும் பொருட்டு நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையான காலப்பகுதியில் பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு உபாயத்திற்கு வசதியளிக்கும் நோக்குடன் இலங்கையின் மிகப் பெரிய ஓய்வூதிய நிதியமாக விளங்கும் ஊழியர் சேமலாப நிதியத்தினைத் தொடர்ந்தும் முகாமைப்படுத்துகின்ற வேளையில், கடுமையான முதலீட்டு வழிகாட்டல்களையும் பின்பற்றி வருகின்றது. முதலீட்டு வழிகாட்டல்களை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கும் அதேவேளை, உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச சாதகமான வருவாயினை எப்பொழுதும் வழங்குவது அதன் நோக்கமாகும். நாம் அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை முதலீடுகளிலும் பங்குரிமை கொடுக்கல்வாங்கல்களிலும் ஈடுபட்டு வருகின்ற அதேவேளை கம்பனி தொகுதிக் கடன்களிலும் முதலீடு செய்து வருகிறோம்.

முன்னோக்கிச் செல்லும் விதத்தில், அண்மைய சந்தை அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் முதலீட்டு வழிகாட்டல்களைத் திருத்துவதற்கும் அதன் மூலம் கூடியளவிற்கு முன்மதியுடைய முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்கின்ற செயற்முறைகளுக்கு வசதியளிப்பதற்கும் அதேவேளையில் தற்போதுள்ள உள்ளக் கட்டுப்பாட்டு சூழலை வலுப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கிறோம். சந்தை வீதங்களுடன் ஒப்பிடுகையில், வருவாயின் உயர் இடர்நேர்வு – சீராக்கம் செய்யப்பட்ட வீதத்தினை உருவாக்குவதற்காக முதலீட்டுச் சொத்துப்பட்டியலை மீளச்சமநிலைப்படுத்துவதற்கும் அதேவேளையில் தற்போதைய குறைந்த மட்ட வட்டி வீதச் சூழலைக் கவனத்திற்குகொண்டு முதலீட்டுச் சொத்துப்பட்டியலை பன்முகப்படுத்துவதற்கான மாற்று முதலீட்டு வழிவகைகளைக் கண்டறிவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தொழிற்பாட்டு ரீதியான வினைத்திறனை அதிகரிப்பதற்கும் ஆர்வலர்களுக்கு உயர்ந்தபட்சப் பணிகளை வழங்குவதற்குமாக, பன்னாட்டு ஆலோசனையாளர்களின் உதவியுடன் 2021இல் வியாபாரச் செய்முறை மீள்பொறியியற்படுத்தலொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கும் இதன் மூலம் உறுப்பினர் மைய ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப தீர்வொன்றினையும் முதலீடு மற்றும் கணக்கீட்டு மாதிரிகளையும் நடைமுறைப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

***வெளிநாட்டுச் செலவாணி முகாமைத்துவம்***

கொவிட்-19 உலகளாவிய நோய்தொற்றின் காரணமாகத் தோன்றிய வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக நாம் செலாவணி வீதத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டும் நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்கு நிலைமையினை உறுதிப்படுத்துவதற்காகவும் நாம் குறிப்பிட்ட அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் மற்றும் குறிப்பிட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வெளிமுகப் பணவனுப்பல்கள் என்பன மீதான கட்டுப்பாடுகள் போன்ற பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை நாம் எடுத்திருந்தோம்.

நாட்டிற்கான உள்முகப் பணவனுப்பல்களை ஊக்குவிக்கும் நோக்குடன் புதிய உள்முகப் பணவனுப்பல்களுடன் திறக்கத்தக்க விதத்தில் சிறப்பு வைப்புக் கணக்கு என்ற பெயரில் புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இது, குறிப்பிடத்தக்களவு தொகையான வெளிநாட்டுச் செலாவணியினைப் பெற்றுக்கொள்ளவும் உதவியாக அமைந்தது.

குறைவடைந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் காரணமாக வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருக்கும் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுவோரினாலும் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கின் உடமையாளர்களான வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கை ஊழியர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு, கடன்பாட்டாளர்களுக்கு வழங்கிய வெளிநாட்டு நாணயக் கடன்கள் போன்றவற்றை அறவிடும் இறுதி முயற்சியாக, இலங்கை ரூபாவில் அவற்றை அறவிடுவதற்கு, குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்குட்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

வெளிநாட்டுச் சூழலில் காணப்பட்ட முன்னேற்றங்களை வலுப்படுத்துவதற்காக, குறிப்பிட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான வெளிப்பாய்ச்சலை இடைநிறுத்துவதற்காக விடுக்கப்பட்ட கட்டளையின் செல்லுபடியாகும் காலம் 2021 சனவரியிலிருந்து மேலுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்படும்.

மேலும், சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு தகைமையுடைய ஆட்களுக்கு வசதியளிப்பதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக வழங்கப்பட்ட அனுமதிக்கு திருத்தப்பட்ட பிரமாணங்களை அறிமுகப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஆர்வலர்களின் தேவைப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு விடுக்கப்படவிருக்கும் திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும் எல்லை கடந்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை மேலும் வலுப்படுத்தி இலகுபடுத்தும்.

முன்னோக்கிச் செல்கையில், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்து இலகுபடுத்தும் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவக் கட்டமைப்பு மீளாய்வு செய்யப்படும். இது, இலங்கையின் பொருளாதாரத்திலிருந்து வெளிநாட்டுச் செலாவணி நியாயமற்ற விதத்தில் கசிவதனையும் தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் ஊக நடவடிக்கைளின் காரணமாக உள்நாட்டு மூலவளங்கள் வெளியேறுவதனையும் தடுக்கும்.

***நிதியியல் உளவறிதல்***

2019இல் நிதியியல் நடவடிக்கைச் செயலணிக்குழு சாம்பல்நிறப்பட்டியலிலிருந்து, இலங்கையினை நீக்கியதனைத் தொடர்ந்து, ஐரோப்பிய ஆணைக்குழுவும், பணம் தூயதாக்கலைத் தடைசெய்கின்ற மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றில் உபாயக் குறைபாடுகளைக் கொண்டிருக்கின்ற உயர் இடர்நேர்வினைக் கொண்ட மூன்றாந்தர நாடுகளின் பட்டியலிலிருந்து 2020 மேயில் இலங்கையை நீக்கியது. பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்புடன் தொடர்பான கரிசனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான கொள்கைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக முக்கிய இணைப்புக் குழுவின் வழிகாட்டலின் கீழ் நாம் தொழிற்பட்டதுடன் அமைச்சரவை ஒப்புதலளித்த தேசிய நடவடிக்கைத் திட்டத்தினது ஆர்வலர்களின் இணைப்பினையும் மேற்கொண்டோம்.

நிதியியல் நிறுவனங்கள், குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் என்பனவற்றிற்கான மேற்பார்வை வகிபாகம் சரியான நேரத்தில் விடுக்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கை என்பனவற்றின் மூலம் வழிநடத்தப்பட்டது. பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்பினை வலுப்படுத்துவதற்காக, பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்பு கடப்பாடுகளை முக்கிய கவனத்தில் கொண்டு 2020ஆம் ஆண்டுப்பகுதியில் பல சுற்றறிக்கைகளையும் வழிகாட்டல்களையும் விடுத்தோம். மேலும், உலகளாவிய நோய்த்தொற்றுடன் தோன்றக்கூடிய பணம் தூயதாக்கலை அல்லது

பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தொடர்பில் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளைக் கவனத்தில் கொண்டு கண்காணிப்பினை அதிகரிக்குமாறு அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்குகின்ற விதத்தில் சுற்றறிக்கையொன்றினை விடுத்தோம். பன்னாட்டு விதிகளையும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களையும் இலங்கை பின்பற்றி வருவதனை நாம் உறுதிப்படுத்தியிருக்கின்றோம்.

2020இல் உளவறிதல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக தேசிய உளவறிதல் தலைவருடன் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது, நிதியியல் உளவறிதல் பிரிவினால் உள்நாட்டு முகவர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் மொத்த எண்ணிக்கையினை 12 இற்கு அதிகரித்தது. மேலும், தொடர்பான தரப்பினரிடையேயான விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக தலத்திலான பரீட்சிப்புக்களை நாம் தொடர்ச்சியாக மேற்கொண்டதுடன் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விடுக்கப்பட்ட விதிகள் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் இணங்கியொழுகாமைக்காக தண்டங்கள் விதிக்கப்பட்டன.

முன்னோக்கிப் பார்க்கையில், தேசிய பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில் தனிப்பட்டவர்களின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலை அபிவிருத்தி செய்வதற்காக ஆர்வலர்களுடன் இணைப்புக்களை மேற்கொள்ள நாம் எதிர்பார்க்கிறோம். மேலும், அனைத்து தொடர்பான ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் 2021ஆம் ஆண்டுப்பகுதியில், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான தேசிய இடர்நேர்வு மதிப்பீடு இற்றைப்படுத்தப்படும். பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் சட்டக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக தொடர்பான சட்டவாக்கங்களைத் திருத்தும் விதத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். மேலும், இது, அறிக்கையிடுகின்ற செயன்முறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகவும் பகுப்பாய்வு இயலாற்றலை அதிகரிப்பதற்காக "பணம் தூயதாக்கலைத் தடுத்தலை நோக்கி" என்ற கணனிவழி அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு முறையினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கிறது. அதேநேரம், தகுதிவாய்ந்த அதிகாரியினால் ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியிடல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மீதான தொடர்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களின் நடைமுறைப்படுத்தல் செயன்முறைக்கு நாம் வசதியளிப்போம்.

***பிரதேச அபிவிருத்தி***

நிதியில் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கான கிரமமான தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, நிதியியல் வசதிக்குட்படுத்தலையும் உறுதியான நிதியியல் முறைமையினையும் நிறுவுவதற்காக, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களை உத்வேகப்படுத்துவதன் மூலம் பொருளாதார நடவடிக்கைக்கு புத்துயிரளிக்கும் பொருட்டு மத்திய வங்கி அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் பெரும் எண்ணிக்கையான தொழிற்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைக்கிட்டது. கொவிட்-19 திடீர் தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு உயர் சலுகை நியதிகளில் தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்காக, சௌபாக்கியா கொவிட்-

19 புனரமைப்புக் கடன் திட்ட வசதி 3 கட்டங்களில் நடைமுறைக்கிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி ஏறத்தாழ 62,000 பாதிக்கப்பட்ட தொழில்முயற்சிகளுக்காக மொத்தமாக ஏறத்தாழ ரூ.180 பில்லியன் கடன்களுக்கு ஒப்புதலளித்தது. தேவையான துறைகளிலுள்ள நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடனை விரிவுபடுத்துவதற்காக கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டங்கள் உட்பட, ஏனைய பல திட்டங்களும் தொழிற்படுத்தப்பட்டன. எமது நோக்கம் யாதெனில், பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் வளர்ச்சி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கடன்களை வழிப்படுத்துவதேயாகும்.

நிதியியல் அறிவு மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பல்வேறு சந்தைகளில் காணப்படும் சீரற்ற தகவல்களைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றினூடாக நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கான எமது முயற்சிகளை நாம் தொடர்கிறோம். நிதியியல் அறிவு போதாமல் இருப்பது, பின்னிப்பிணைந்திருக்கும் இடர்நேர்வுகளை உரிய முறையில் பரிசீலனையில் கொள்ளக்கூடிய உயர் வட்டி வருவாய்களில் பின்னால் வைப்பாளர்கள் செல்வது போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கிறது. எனவே, சந்தையில் தரமான தாங்கிக் கொள்ளக்கூடிய மற்றும் உறுதித்தன்மை வாய்ந்த நிதியியல் சாதனங்களின் பயன்பாட்டினையும் கிடைப்பனவினையும் அதிகரித்துக் கொள்ளும் நோக்குடன் 2021இல் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிதியியல் வசதிக்குட்படுத்தலை விரிவுபடுத்துவதற்கு நாம் தொடர்ச்சியான கடப்பாடுகளைக் கொண்டிருக்கின்றோம். மேலும், எதிர்காலத்தில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் சபையினையும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் முகாமைத்துவக் குழுவையும் நிறுவுதல் முக்கிய முன்னுரிமைக்குரிய விடயங்களாக இருக்கும். நுண்பாக சிறியளவு தொழில்முயற்சிகளின் வருமானத்தினை உயர்த்துவதற்கும் நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கும் முறைசார்ந்த நிதியியல் துறை ஆதரவினை வழங்குவதற்கும் கிராமிய சமூகத்தினரிடையே விழிப்புணர்வினை அதிகரிப்பதற்குமாக அவற்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் அநேக செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. நாமும், ஆரோக்கியமான வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்காக சூழல்-சிநேகபூர்வ பசுமை கிராம சூழலொன்றினை மேம்படுத்துவதனைத் திட்டமிட்டுள்ள வேளையில் பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதன் மீது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

***நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள்***

மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்கள் தொடர்பில் மத்திய வங்கிக்கு அனுப்பப்படும் அனைத்து வெளிவாரி முறைப்பாடுகளையும் மனக்குறைகளையும் கையாளுகின்ற விதத்தில் தனியொரு கூரையின் கீழ் பணியாற்றும் பொறுப்பாண்மையுடன் கூடிய புதிய திணைக்களமொன்றினை நாம் மத்திய வங்கியில் உருவாக்கியிருக்கிறோம். இது, மத்திய வங்கியினால் பின்பற்றப்படும் கொள்கைகளும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளும் பொதுமக்களுக்கு உதவுகின்ற விதத்தில் அடிமட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும். இப்புதிய திணைக்களம் நிதியியல் சந்தை நடத்தையினையும் ஏனைய தொடர்பான நடவடிக்கைகளையும் ஒழுங்குமுறைப்படுத்துவதில் முன்கூட்டியே ஈடுபடுவதனை இயலச்செய்யும்

விதத்தில் அதன் அதிகார வரம்பின் கீழ்வரும் நிறுவனங்களை உள்ளடக்குகின்ற விதத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு கட்டமைப்பொன்றினை உருவாக்குவது தொடர்பில் ஒழுங்குவிதிகளை வரைகின்ற செய்முறையில் ஈடுபட்டிருக்கிறது. முன்னோக்கிப் பார்க்கையில் புதிய தொடர்பு நிலையமொன்று ஏற்படுத்தப்படவுள்ளது. இது, நிதியியல் வாடிக்கையாளர்களுக்கு எளிமையான அணுகுவசதிகளை வழங்குவதன் மூலம் அதன் நடவடிக்கைகளைக் காத்திரமான முறையில் ஆற்றுவதற்கு வசதியளிக்கும். மேலும், இது, மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரவரம்பின் கீழுள்ள அனைத்து நிதியியல் நிறுவனங்களையும் உள்ளடக்குகின்ற விதத்தில் புதிய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புச் சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற அதேவேளையில், இலங்கையிலுள்ள நிதியியல் சந்தையிலுள்ள அநேக நிதியியல் பணி வழங்குபவர்களுடன் சேர்த்து நிதியியல் தொழில் துறையிலுள்ள அனைத்து ஆர்வலர்களையும் உள்ளடக்குகின்ற சுயாதீனமான நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு அதிகாரசபையொன்றினை ஏற்படுத்துவதற்கு எதிர்காலத்தில் வழிமுறைகள் மேற்கொள்ளப்படும்.

## 5. முடிவுரைக் குறிப்புக்கள்

சீமாட்டிகளே மற்றும் கனவான்களே,

எனது நீண்ட உரையினைச் சுருக்கமான முடிவுரையுடனும் அவசியமான நன்றி பாராட்டுதல்களுடனும் முடித்துக் கொள்ளலாமென நினைக்கிறேன்.

ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டவாறு, 2020ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை அதிகளவான பாதிக்கப்படும் தன்மைகளுக்குட்பட்டிருந்தது. அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் முன்மதியுடைய வழிமுறைகளின் காரணமாக அத்தகைய பாதிக்கப்படும் தன்மையின் தாக்கம் பெருமளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டது. இதுவரை நடைமுறைக்கிடப்பட்ட கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் பொருளாதாரத்தின் மீதும் மக்களின் நலனோம்புகைகளின் மீதுமான பல்முனை கொண்ட அதிர்வுகளின் மோசமான தாக்கத்தினை எதிர்கொள்வதற்கு எமக்கு உதவின. இருப்பினும் கூட, உலகளாவிய அதிர்வுகளுடன் சேர்ந்து காணப்படும் உயர்ந்தளவிலான இடர்நேர்வு மற்றும் நிச்சயமற்றதன்மை என்பனவற்றைக் கவனத்திற்கொள்கையில், நாம் தொடர்ச்சியாக எச்சரிக்கையுடனிருப்பதும் பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீது ஏற்படக்கூடிய சாத்தியமான அழுத்தம் பற்றி விழிப்புடனிருப்பதும் அவசியமாகும். மேலும், உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களின் மோசமான தன்மையினை அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் தனித்துக் கட்டுப்படுத்த முடியாது. இதற்கு பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களும் ஈடுபாடு கொண்டுள்ள ஒத்துழைப்புமிக்க அணுகுமுறை தேவைப்படுகிறது. அத்தகைய ஆதரவு மற்றும் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த தீர்மானங்கள் மற்றும் பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் மாத்திரமே நாம் எந்தவொரு எதிர்காலச் சவால்களையும் நிச்சயமற்றதன்மைகளையும் தணிக்கக்கூடியவர்களாகவும் பொருளாதாரத்தினையும் நிதியியல் துறையினையும் சரியான திசையில் வழிநடத்தக்கூடியவர்களாகவும் இருக்கின்றோம். மத்திய வங்கி பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டினையும் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினையும் பேணுகின்ற குறிக்கோள்களை எய்துகின்ற திடமான கடப்பாடுகளைக் கொண்டிருந்ததுடன் நாட்டின் மூலவளங்களின் உற்பத்தித்திறன் மிக்கப் பயன்பாட்டின் மேம்படுதலுக்கும் உத்வேகமளித்தலுக்கும் உதவிசெய்யும். இது, நடுத்தர காலப்பகுதியில் உறுதிவாய்ந்ததும் சமத்துவமானதுமான பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்குப் பொருத்தமான சமச்சீரான பேரண்டப் பொருளாதார நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு உதவும். நடுத்தர காலத்திற்கு அப்பால், இதனை நோக்குகையில், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் உருவாக்கப்பட்ட சந்தர்ப்பத்தினை டிஜிட்டல் ரீதியில் வசதிக்குட்படுத்தல், தொழில்நுட்ப ரீதியான தூண்டுதல் மற்றும் சூழல் சிநேகபூர்வத்தன்மை என்பனவற்றைக் கட்டாயமாக உள்ளடக்கிய உறுதியான உயர்ந்த வளர்ச்சிக்குமான நீண்ட காலத் திட்டத்திற்கு நாம் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதன் மூலம் இலங்கையின் எதிர்காலச் சந்ததியினர் உயர்ந்தளவு பொருளாதாரச் சுதந்திரத்தினையும் சுபீட்சத்தினையும் பிரகாசமான எதிர்காலத்தினையும் அனுபவிப்பர். நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளை எய்துவது, உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான கொள்கை வகுப்பின் மையப்பொருளாக இருத்தல் வேண்டும் என்பதனை கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று அனைத்து சமூகத்தினருக்குமான வலுவான செய்தியாகத் தெரிவித்திருக்கிறது என்பதுடன் மத்திய வங்கி

பகிரப்பட்ட சுபீட்சம் என்கின்ற எங்களுடைய ஒன்றுசேர்ந்த இலக்கினை அடைவதற்கு அரசாங்கம் மற்றும் ஏனைய ஆர்வலர்களுடன் இணைந்து தீவிரமான பங்கொன்றினை ஆற்றுவதற்கு உறுதியான கடப்பாட்டினைக் கொண்டிருக்கும். வழிகாட்டலில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் எதிர்காலக் கொள்கை நெறிப்படுத்தல்களும் நடவடிக்கைகளும் நடுத்தர காலத்திற்கும் அதற்கு அப்பாலுக்குமான பொருளாதாரத்தில் பரந்த கொள்கைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் ஆர்வலர்கள் தமது நடவடிக்கைகளை உருவாக்குவதற்கும் அணிப்படுத்துவதற்குமான வழிகாட்டலொன்றாகப் பணியாற்றுமென நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

எனது உரையினை நிறைவு செய்வதற்கு முன்னர், மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு பங்களிப்பினையும் ஆதரவினையும் வழங்கிய தனிப்பட்ட பல்வேறு தரப்பினர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்ள என்னை அனுமதிப்பீர்களென நம்புகிறேன். முதலிலும் முக்கியமாகவும் அதிமேதகு சனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கும் மாண்புமிகு பிரதம மந்திரியும் நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் அவர்களது தலைமைத்துவம், வழிகாட்டல் மற்றும் ஆதரவிற்காகவும் விசேடமாக அரசாங்கத்திற்கும் மத்திய வங்கிக்குமிடையிலான நெருங்கிய இணைப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சிகளுக்காகவும் எனது மிகுந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பணம் மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சிகள் சீர்திருத்தங்களின் மாண்புமிகு ராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் அவர்களுக்கும் சமுர்த்தி, வீட்டலகுகள் பொருளாதாரம், நுண்பாக நிதி, சுயவேலை வாய்ப்பு, வியாபார அபிவிருத்தி, அரச மூலவளங்களின் குறைப்பயன்பாட்டு அபிவிருத்தி மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் ஷேகான் சேமசிங்க அவர்களுக்கும் அதிமேதகு சனாதிபதியின் செயலாளர் பி. பீ ஜெயசுந்தர அவர்களுக்கும் மத்திய வங்கியின் பணிக்காக அவர்கள் அளித்த விலைமதிப்பற்ற ஆதரவிற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய வங்கியின் நாணயச் சபை உறுப்பினர்களிடமிருந்து குறிப்பாக, சவால் நிறைந்த இக்காலப்பகுதியில் கிடைத்த அளப்பரிய ஆதரவு மற்றும் விலைமதிப்பற்ற கலந்தாராய்வுகள் மற்றும் ஆழ்ந்த ஆலோசனைகளுக்கும் எனது உளம் நிறைந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். எனது மனநிறைந்த பாராட்டுதல்களை திறைசேரியின் செயலாளரும் நாணயச் சபையின் பதவிவழி உறுப்பினருமான திரு. எஸ்.ஆர். ஆட்டிகல அவர்களுக்கும் நாணயச் சபையின் உறுப்பினர்களான திரு. சஞ்சீவ ஜயவர்த்தன, சனாதிபதி சட்டத்தரணி; முனைவர் (திருமதி) ராணி ஜயமகா மற்றும் திரு. சமந்த குமாரசிங்க ஆகியோருக்கு கொள்கை வகுப்பில் தூண்டுலளித்தமைக்காகவும் கணிசமானளவில் விளங்கிய அவர்களது நிலையான ஆதரவிற்காகவும் எனது ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும், 2020இன் தொடக்கப்பகுதியில் நாணயச் சபை உறுப்பினர்களாகப் பணியாற்றிய திரு. கிறிசாந்த பெரேரா, திரு. நிகால் பொன்சேகா மற்றும் முனைவர் (செல்வி) துஷ்னி வீரகோனுக்கும் அவர்களது நிபந்தனையற்ற ஆதரவிற்காக எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக உருவாக்கப்பட்ட நாணயக் கொள்கை ஆலோசனைக் குழு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு என்பனவற்றின் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் அதேபோன்று மத்திய வங்கியின் மற்றைய ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் அவர்கள் வழங்கிய பங்களிப்புக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் முதன்மை நிறைவேற்று

அலுவலர்கள், ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் முகவர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் ஆதரவிற்கும் எனது மனநிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துணை ஆளுநர்களான திரு. கே.எம்.எம். சிறிவர்த்தன, திருமதி. ரி.எம்.ஜே.வை.பி. பர்னாந்து மற்றும் என்.டபிள்யு.ஜி.ஆர்.டி. நாணயக்கார ஆகியோருக்கு அவர்கள் அளித்த ஆதரவிற்கும் உயர் தொழில்சார் நிபுணத்துவ ஆலோசனைகள் மற்றும் விதந்துரைப்புக்கள் தொடர்பில் அவர்கள் வழங்கிய பங்களிப்பிற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கடந்த ஆண்டில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற மூத்த துணை ஆளுநர் முனைவர் நந்தலால் வீரசிங்க மற்றும் துணை ஆளுநர் திரு. எச்.ஏ. கருணாரத்ன ஆகியோருக்கு அவர்கள் வழங்கிய பணிக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உதவி ஆளுநர்களுக்கும் திணைக்களத்தின் மூத்த தலைவர்கள் மற்றும் தலைவர்களுக்கு, குறிப்பாக, பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் ஆகியோருக்கு இக்கொள்கை ஆவணத்தினைத் தயாரிப்பதில் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்காக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நாளாந்த அடிப்படையில் எனக்களித்துவரும் ஆதரவிற்காக ஆளுநர் செயலகத்திலுள்ள எனது சக அலுவலர்களுக்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்றுமே எதிர்பார்ப்புக்களுக்கு ஆதரவளிக்கின்றவர்களும் சவால் நிறைந்த நேரங்களிலும் கூட உத்வேகத்துடனும் ஆர்வத்துடனும் நாட்டிற்காக அர்த்தம் நிரம்பிய விதத்தில் பங்களிக்கின்ற மத்திய வங்கி அலுவலர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பரந்தளவிலான பாகுபடற்ற பொருளாதார நம்பிக்கைகளின் உத்வேகத்திற்கு அதிவிசேடத்துவம் மிக்க முயற்சிகள் தேவைப்படுகின்ற, இடர்ப்பாடுகளும் நிச்சயமற்றதன்மைகளும் நிறைந்த காலப்பகுதியொன்றில் நாம் வாழ்கின்றோம் என்பதனை வலியுறுத்திக் கொண்டு எனது உரையினை நிறைவு செய்து கொள்ளலாம் என நினைக்கின்றேன். முயற்சி நிறைந்த சூழ்நிலைகளில் கிடைக்கும் ஒத்துழைப்பு நிறைந்த அணுகுமுறையும் தொடர்ச்சியான ஆதரவும் இலங்கையில் பலம் மிக்க நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியொன்றினை உருவாக்குமென நான் நம்புகிறேன். வரலாற்றில் மிகச் சிறந்த ஐக்கிய அமெரிக்க சனாதிபதிகளில் ஒருவரான தியோடர் ரூஸ்வெல் "ஏதேனும் சரியானதொரு தருணத்தில் நீ எடுக்கின்ற தீர்மானமே உன்னால் முடியக்கூடிய மிகச்சிறந்த சரியான செயலாக இருக்கும். அடுத்த சிறப்பான செயலானது பிழையான செயலாகும். ஆனால் நீ எதையும் செய்யாமல் இருப்பதே மிக மோசமான செயலாக இருக்கும்" எனக் குறிப்பிடுகின்றார். இடர்ப்பாடான நேரங்களில் மீளெழுச்சியைக் கட்டியெழுப்பி துன்பங்களிலிருந்து மேலெழுந்து வருவதற்கு எமக்கு உதவுவதற்கு நாம் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டுமென்பதனை நான் நம்புகின்றேன். அது மிகக் கவனமாக தவறுகளைத் தவிர்ப்பனவையாகவும் ஆனால் செயற்பாடுகளை நோக்கியதாகவும் அமைய வேண்டும். நாணய மற்றும் நிதித் துறை தொடர்பாக நாம் வெளியிட்ட கொள்கைகளும் திட்டங்களும் பொருளாதாரத்தில் தொலைநோக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருளாதார முகவர்களுக்கு தூண்டுதலளிக்கும் சூழலை உருவாக்குமென நான் திடமாக நம்புகிறேன்.

தங்களுக்கு நன்றி. தங்கள் எல்லோருக்கும் 2021ஆம் புத்தாண்டு மகிழ்ச்சியும் சுபீட்சமும் மிக்கதாக அமைய வாழ்த்துகிறேன்.